# சுருட்டுத் தொழிலாளரின் கூலியை கூட்டும்படி கோரிக்கை


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

மலர் 11
இதழ்: 286
தேசிய தினசரி

தபால் பெட்டி எண் 49
போன்: 389

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒருவருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் கார்த்திகை 11 றம்ழான் 15 புதன்கிழமை [26-11-69]


யாழ்ப்பாணம், புதன்

இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்கம் சுருட்டுத் தொழிலாளர்களுடையவாழ்க்கைச்செலவு விஷம்போல் ஏறிக்கொண்டு போவதாலும் அரசாங்கஊழியர்களுக்கும் சம்பள உயர்வு கூடி இருப்பதாலும், தனியார் துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு கூடி இருப்பதாலும், சுருட்டுத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைச் செலவை சமாளிக்க கூலியை கூட்டிக்கொடுக்க வேண்டும் என்று சுருட்டு உற்பத்தியாளர் சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்க பொதுச்சபைக் கூட்டம் திரு.க.சோமஸ்கந்தன் தலைமையில் நடைபெற்றபோது மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

சங்கக்காரியதரிசி திரு. சி. முதலியார் கூறியதாவது: சுருட்டுத்தொழிலாளர் பலவிதமான இன்னல்களிலிருந்து பாதிக்கப்பட்டு வருவதைநாம்அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. எமது சங்கம் சுருட்டுத் தொழிலாளரின் குறைபாடுகளை நீக்க ஆவன செய்துள்ளது. தொழில் கோர்ட்டில் எமது சங்கம்த் வழக்கு தாக்கல் செய்து தொழிலாளருக்கு அரசாங்கம் நிர்ணயித்த கூலியை எடுத்துக்கொடுத்திருக்கிறது.

திருவாளர்கள் க.அ.பரராஜசிங்கம், வி.ஆறுமுகம், சி.நவரத்தினம், அ.தனபாலசிங்கம் ஆகியோரும்பேசினர்கள்.

## ஆனையிறவு உப்பள விஸ்தரிப்பு

### கேரதீவு வரை நீடிக்கப்படும்

யாழ்ப்பாணம், புதன்

ஆனையிறவு உப்பள விஸ்தரிப்பு வேலைகளின் முதற்கட்டம் இப்போது துரிதமாக நடைபெற்று வருகின்றது.

முதற் கட்ட வேலையின் போது ஆனையிறவு உப்பளம் தெற்கே கரைச்சி காரியாதிகாரி பிரிவு வரைக்கும் வடக்கே பளை காரியாதிகாரி பிரிவு வரைக்கும் விஸ்தரிக்கப்படும்.

படிப்படியாக இவ் விஸ்தரிப்பு வேலை கேரதீவு தனங்கிளப்பு வரையும் நடைபெறும் என அரசாங்க செயலக உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது நடைபெறும் உப்பள விஸ்தரிப்பு வேலையில் உத்தியோகஸ்தர்கள் விடுதியும் நிறுவப்பட்டு வருகிறது. உப்பள விஸ்தப்பு வேலைகள் முடிவடைந்ததும் ஆனையிறவு உப்பள உற்பத்தி இரண்டு மடங்காக அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(கா. நி)

யாழ். மாவட்ட

# குடியேற்றத்திட்ட வாசிகளுக்கு 25 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு

## வீடு, கிணறு, பாடசாலைகள் அமைக்க செலவிடப்படும்

யாழ்ப்பாணம், புதன்

**எதிர்வரும் செப்டம்பர் மாதத்திற்கு முன்னர் யாழ். மாவட்டத்திலுள்ள குடியேற்ற வாசிகளுக்கு வீடுகள், கிணறுகள், பாடசாலைகள் போன்றன அமைப்பதற்கு காணி அபிவிருத்திப் பகுதி 25 லட்சத்து 76 ஆயிரம் ரூபாவை செலவிடவிருக்கின்றது**

1969-ம்-70-ம் நிதியாண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இப்பணத்தில் குடியேற்றத் திட்டங்களில் 65 கிணறுகள், 6 பாடசாலைகள், 19 ஆசிரியர் இல்லங்கள், 5 குடியேற்ற அலுவலகங்கள், ஒரு கூட்டுறவுப் பண்டகசாலை, 10 குடியேற்றமேற்பார்வை இல்லங்கள் ஆகியன அமைக்கப்படும்.

இக்குடியேற்றத்திட்டங்களில் நிறுவப்பட்டுள்ளதாகத் தகவல் பகுதியினரின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர இரணைமடு வவனிக்குளம், அக்கராயன் குளம், கரியாலை நாகபடுவான், கோட்டைகட்டின குளம், அம்பலப்பெருமாள் குளம், தென்னியன் குளம் ... நிலம் 44087 காணித்துண்டுகளாகவும், 9072ஏக்கர்நிலம் குடியேற்றத் திட்டத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது.

1965-ம் ஆண்டு முதல்கடந்த செப்டம்பர் இறுதிவரையான 4 ஆண்டிலும் யாழ். மாவட்டத்தில் 3168 ஏக்கர் நிலம் நெல் உற்பத்திக்கும், 2804 ஏக்கர் நிலம் குடியேற்றத்திட்டத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது.

(கா. நி)

## அமைச்சர் சி. பி. டி. இன்று யாழ். வருகிறர்

யாழ்ப்பாணம், புதன்

காணி நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா இன்று மாலை உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாணம் விஜயம் செய்கின்றர்.



துன்னலை, மாதகல், இளவாலைப் பகுதிகளுக்கு மின்சார விநியோகத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவே இவர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றர்.

சாங்க அதிகாரிகளாலும் இவருக்கு மகத்தான வரவேற்பளிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

உதவி காணி நீர்ப்பாசன அமைச்சர் கப்டன் செனிவரத்தினவும், நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தாவும் இவருடன் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா கடந்த வாரமே லண்டனிலிருந்து இலங்கை திரும்பியது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மாலை 5.30 மணிக்கு துன்னலையில் 45 ஆயிரம் ரூபா செலவிலும், மாலை7மணிக்கு மாதகலில் 89 ஆயிரத்து400 ரூபாவிலும், இரவு7-30மணிக்கு இளவாலையில் ஒரு லட்

### கல்விச்சுற்றுலா

உடுப்பிட்டி, செவ்வாய்

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரியின் 5-ம் 6-ப் வகுப்பு மாணவ மாணவிகள் கடந்த வாரம் யாழ்குடாநாட்டில் கல்விச் சுற்றுலா சென்று திரும்பினர் ஆசிரியர்கள் திரு ஜே. எஸ். கிறிஸ்ததாஸ் திரு எஸ். சிவகுரு ஆகியோர் இச் சுற்றுலாவிற்கு மேற்பார்வையாளர்களாக சென்றனர்.

### ஏஜன்ட் காலமானர்

யாழ்ப்பாணம், புதன்

'ஈழநாடு' பத்திரிகையின் கல்வியங்காடு பகுதி ஏஜன்டும், நல்லூர் மார்க்கட் குமரன் மெடிக்கல் ஸ்டோர்ஸ் உரிமையாளருமான திரு. து. நல்லநாதன் கடந்த வாரம் திடீரென நோய்வாய்ப்பட்டு மரணமானர்.

### வேலையில்லாப் பிரச்னைபற்றி ஆராய்வர்

யாழ்ம்பாணம், புதன்

யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற வாலிபர்

யாழ். மாநகர சபை

## அடிகளார் பேச்சு பற்றி தீர்மானம் வாபஸ்

### வரி விதிப்பு பற்றி சபையில் விவாதம்

யாழ்ப்பாணம், புதன்

மாநகர சபையில் எந்த மொழியிலும் பேசஉரிமையுண்டு. இங்குள்ள பிரேரணை ஆங்கிலத்தில் இருப்பதனுல் ஆங்கிலத்தில்பேச முன்வந்தேன் ஆங்கிலத்தில்மட்டுமல்ல அராபிக்கிலும் கிரேக்கமொழியிலும் விரும்பினுல் பேசுவேன்

யாழ்ப்பாணம் மாநகர சபை கூட்டம் நேற்று முன்தினம் மேயர் திரு எஸ்.நாகராசா தலைமையில் நடந்தபோது திரு என் அந்தோணிப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினுர் சபையில் எந்த மொழியில் பேசுவது என்ற பிரச்னை எழுந்தபோதே அவர் இப்ப்டி கூறினுர்.

திரு அந்தோனிப்பிள்ளை ஆங்கிலத்தில் பேசும்போது, ஜனுப் எம் ஸி பஸிர் குறுக்கிட்டு, தாய்ப்பாஷையாகிய தமிழில்பேசும்படியும், தமிழ் தெரிந்த ஒருவர் தமிழில் பேசுவது நல்லதென்றும் கூறினுர். அச்சமயம் திரு ஏ. ஜி ராஜசூரியர், இச்சபையில் ஆங்கிலத்தில் பேச அங்கத்தவருக்கு உரிமையுண்டு என்று கூறினுர் இதன் பின் திரு அந்தோணிப்பிள்ளை தொடர்ந்து ஆங்கிலத்தில்

மேயர் இதுபற்றி ஆலோசிக்கவேண்டியிருப்பதால் இதனை ஒத்திப்போடுவதாக தெரிவித்தார் இதனை ஆட்சேபித்து திரு ஏ விஸ்வநாதன் வெளிநடப்பு செய்தார் அவர் வெளியில் செல்லும்போது, அவரது பிரேரணையை ஆதரித்தவர்கள் பின் தொடரவில்லை அவர் மீண்டும் சபையில் அமர்ந்து கொண்டார்

#### ஒத்திவைக்க கோரிக்கை

சபைநடவடிக்கை சரியான முறையில் நடைபெறவில்லையென்றுகூறி கூட்டத்தை ஒத்திவைக்கும்படி திரு ஏ ரி துரையப்பா கோரினுர் ஒத்தி வைக்க சட்டம் இடம் கொடுக்கவில்லையெனக் கூறிமேயர் கூட்டத்தை தொடர்ந்து நடத்தினுர் இச்சமயத்தில் சபையில் இரு பகுதிபிலும் பலத்த வாக்கு வாதங்கள் நடந்தன 'நான்சென்ஸ்' என்ற வார்த்தையும், இடையிடையே பாவிக்கப்பட்டன கடைசியில் நிகழ்ச்சிகள் முடிவடையும் வரை சுமார் 4மணி நேரம் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது

#### வரிகுறைப்புவாதங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்களில் 65 கிணறு கள், 6 பாடசாலைகள், 19 ஆசிரியர் இல்லங்கள், 5 குடியேற்ற அலுவலகங்கள், ஒரு கூட்டுறவுப் பண்டகசாலை, 10 குடியேற்றமேற்பார்வை இல்லங்கள் ஆகியன அமைக் கப்படும்.

இதுதவிர குடியேற்றவ சி களின் வீடுகள், மலகூடங் கள் அமைக்கவும் துணைப் பணம் வழங்கப்படும்.

தேசிய அரசாங்கம்அமைக் கப்பட்ட 1965-ம் ஆண்டு முதல் 1969-ம் ஆண்டு செப்டம்பர் வரை யாழ். மாவட்டத்தில் 625 குடி யேற்ற வீடுகளும், 7 பாட சாலைகளும், 6 வைத்திய மருத்துவ மனைகளும், 13 கூட்டுறவுப் பண்டகசாலைக ளும், 5 உப தபால்நிலையங் அறிக்கையொன்றில் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதுதவிர இரணைமடு வவ னிக்குளம், அக்கராயன் குளம், கரியாலை நாகபடு வான், கோட்டைகட்டின குளம், அம்பலப்பெருமாள் குளம், தென்னியன் குளம் முறிகண்டிக்குளம், மருதங் குளம், கனகாம்பிகைக் குளம், தர்மபுரம், கிராஞ்சி வன்னேரிக்குளம், கனகபுரம் ஆகிய 14 குடியேற்றத்திட் டங்களுக்கும் 1965-ம் ஆண்டு முதல் ஒரு கோடி 4 லட்சத்து 6 ஆயிரம் ரூபா காணி அபிவிருத்திப் பகுதி யால் செலவிடப்பட்டுள் ளது.

1965-ம் ஆண்டுக்கு முன் னர் 12385 ஏக்கர் நெல் வழங்கப்பட்டுள்ளது.

1965-ம் ஆண்டு முதல்கட ந்த செப்டம்பர் இறுதிவரை யான 4 ஆண்டிலும் யாழ். மாவட்டத்தில் 3168 ஏக்கர் நிலம் நெல் உற்பத்திக்கும், 2804 ஏக்கர் நிலம் குடியேற் றத்திட்டத்துக்கும் வழங்கப் பட்டுள்ளது. (கா. நி)



கத்தை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கவே இவர் இன்று யாழ்ப் ணம் வருகின்றார்.

இன்று மாலை 4 மணிக்கு பலாலி விமான நிலையத்தில் இவர்கள் வந்திறங்கும் போது காணி, நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளா லும், யாழ்ப்பாணம் அர லண்டனிலிருந்து இலங்கை திரும்பியது இங்கு குறிப் பிடத்தக்கதாகும்.

மாலை 5.30 மணிக்கு துன் னாலையில் 45 ஆயிரம் ரூபா செலவிலும், மாலை7மணிக்கு மாதகலில் 89 ஆயிரத்து400 ரூபாவிலும், இரவு7-30மணி க்கு இளவாலையில் ஒரு லட் சத்து 13 ஆயிரத்து 500 ரூபா செலவிலும் அமைக் கப்பட்ட மின்சார விநியோ கத்தை அமைச்சர் ஆரம் பித்துவைப்பார். (கா. நி)

# வேலையில்லாப் பிரச்னைபற்றி ஆராய்வர்

யாழ்ம்பாணம், புதன்

யாழ். மாவட்டத்தி லுள்ள வேலையற்ற வாலிபர் களை ஒன்றுதிரட்டி நட வடிக்கை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது வேலை யற்ற வாலிபர் சங்கம்.

வாலிபர் இயக்கங்களை இணைத்து சம்மேளனம் அமைப்பது குறித்தும் வேலையில்லாத் திண்டாட் டம்பற்றியும், அதற்கான காரணங்கள்பற்றியும், அத னைத் தீர்ப்பதுபற்றியும் இம் மாதம் 30-ம் திகதி மாலை 4 மணிககு வேலையற்ற வாலி பர் சங்கம் யாழ் மலையா கபே மேல் மாடியில் கூடி ஆராயவுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள உட்பட வேலையற்ற வாலி பர்கள் அனைவரையும் இக் கூட்டத்தில் கலந்து கொள் ளும்படி செயலாளர் அழை ப்பு விடுத்துள்ளார்.

தெரிந்த ஒருவர் தமிழில் பேசுவது நல்லதென்றும் கூறினார். அச்சமயம் திரு ஏ. ஜி ராஜசூரியர், இச்சபை யில் ஆங்கிலத்தில் பேச அங் கத்தவருக்கு உரிமையுண்டு என்று கூறினார் இதன் பின் திரு அந்தோணிப்பிள்ளை தொடர்ந்து ஆங்கிலத்தில் பேசினார்

## விஸ்வநாதன் வெளி நடப்பு

நிதிக் கமிட்டியின் வரிவிதி ப்பு தீர்மானம் பற்றி சபை ஆராய்ந்தபோது, திரு ஏ விஸ்வநாதன் ஒரு திருத்த த்தை கொண்டு வந்தார் 68ம் ஆண்டில் இருந்ததைப் போலவே 1970ம் ஆண்டும் வரி வசூலிக்கப்பட வேண் டும் என்ற திருத்தத்தை கொண்டுவந்த போது, தத வாக்கு வாதங்கள் நடந்தன 'நான்சென்ஸ்' என்ற வார்த்தையும், இடை யிடையே பாவிக்கப்பட்டன கடைசியில் நிகழ்ச்சிகள் முடிவடையும் வரை சுமார் 4மணி நேரம் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது

## வரிகுறைப்புவாதங்கள்

வரி சம்பந்தமான திருத்த பிரேரணை கொண்டுவர மேயர் அனுமதிக்காததை தொடர்ந்து பலத்த வாக்கு வாதம் நடைபெற்றது ஒவ் வொரு வருட முடிவிலும் அடுத்த வருடத்திற்கு உரிய வரிபற்றி சபை தான் முடிவுசெய்ய வேண் டும்என திரு ஏ ரி துரைய ப்பா தெரிவித்தார் வரியை குறைப்பதற்கு மந்திரியின் அங்கிகாரம் வேண்டும் என

(4-ம் பககம் பார்க்க

# வெளிநாடுகளில் தி.மு.க. ஆட்சிக்கு பாராட்டு

## புலவர் கோவிந்தன் தகவல்

சென்னை, நவ. 25

''தமிழ் நாட்டில் திரா விட முன்னேற்றக்கழக அர சாங்கம் நல்ல முறையில் நிர்வாகத்தை நடத்தி வருவ தாக வெளிநாடுகளில் உள்ள வர்கள் பாராட்டுகிறார்கள்.

சாம்ராஜ்ய ஆட்சிமன்றக் கூட்டத்தில்கலந்து கொண்டு திரும்பிய புலவர் கோவிந் தனுக்கு அளிக்கப்பட்ட பாராட்டுவிழாவில், புலவர் கோவிந்தன் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகை யில் ''தமிழ்நாட்டில்அண்ணா மறைவுக்குப்பின்பு குழப்பம் ஏற்படுமோ என்று வெளி நாடுகளில் உள்ள தமிழர்கள் அச்சம் கொண்டிருந்ததாக கூறினார்கள். ஆனால் தமிழ் நாட்டில் அமைதியான நிலை யான ஆட்சி ஏற்பட்டு இருக் கிறதை எண்ணிப்பார்க்கும் போது மகிழ்ச்சியாக விருக் கிறது' என்று வெளிநாட்டி லுள்ள தமிழர்கள் கூறிய தாக புலவர் கோவிந்தன் மேலும் பேசுகையில் கூறி னார்.

# ''அரசாங்க ஊழியருக்கு நிவாரணம்வழங்கவேண்டும்'

## யாழ். மாநகரசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

அரசாங்க ஊழியர்களுக்கு நடாத்தப்படும் தகுதிகாண் சிங்களப் பரீட்சையின் தரம் முன்னர் இருந்ததைவிட கடுமையானதாக இருப்ப தால் பல ஊழியர்கள் சித்தி பெறுவது கஷ்டமாயிருந்த தும் அப்படியான கடுமை யான பரீட்சையில் சித்தி யடைந்த பின்பும் சம்பள உயர்வு பதவி உறுதிப்பாடு முதலியன பெறமுடியாது அவதியுறும் அரசாங்க ஊழி யர்களின் நிலைமையைஆரா ய்ந்து இத்துன்பத்தில் அவர் களுக்கு வேண்டிய நிவா ரணம் கிடைக்க வழி வகை செய்யுமாறுபிரத மரையும் நிதி மந்திரியை யும் கேட்டுக்கொள்வது என இம் மன்றம் தீர்மானிக்கி றது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக் கூட்டத்தில் எஸ். ஜே. அன்ரனியால் கொண்டு வரப்பட்ட மேற்கண்ட தீர் மானம் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது.

திரு நா. த.செல்லத்துரை கொண்டுவந்த கீழ்காணும் பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேறியது மாநகர எல் லைக்குள் உள்ள மின்கம்பத் தில் உள்ள போஸ்ட் பிறக் கற்றுகள் எல்லாம் பூச்சு அழிந்தும் அழகு இல்லாம லும் பார்வைக்கு விகார மாய் இருப்பதால் எல்லைக் குள் உள்ள எல்லா பிறைக் கற்றுகளையும் மைபூசி பிரகா சிக்கச்செய்யும்படி இச்சபை கேட்டுக் கொள்கிறது.

# மாணவர் களைபிடுங்கினர்

கோப்பாய், செவ்வாய்

கோப்பாய்பகுதியில் மாண வர்கள் களை பிடுங்கும் நிகழ் ச்சி ஆரம்பமாகியுள்ளது. இன்று கோப்பாய் அரசினர் மகாவித்தியாலய மாணவ மாணவியர் வயல்களில் களை பிடுங்கினார்கள்.

அடுத்த தேர்தலில்

# கிளிநொச்சி தொகுதியைப் பெற சிறுபான்மைத் தமிழர் முயற்சி?

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சி தொகுதியை சிறுபான்மைதமிழருக்குவிட் டுக்கொடுக்கும்படி தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் கூட்டாட் சிக்கட்சிகளை கோருவதற்கு சிறுபான்மைத்தமிழர் இயக் கங்கள் முன்வந்திருப்பதாக கூறப்படுகிறது.

கிளிநொச்சியில் 65-ம் ஆண்டு தமிழரசு சார்பில் போட்டியிட்ட பண்டிதர் கா. பொ. இரத்தினம் அடு த்த தேர்தலில் ஊர்காவற் றுறையிலும் தமிழ்க்காங் கிரஸ் கடந்த தேர்தலில் கிளிநொச்சியிலும் போட்டி யிட்ட திரு. வி. குமாரசாமி அடுத்த தேர்தலில் சாவகச் சேரியிலும் போட்டியிடுவ தாகவும்சமசமாஜ கட்சியின் சார்பில்கிளிநொச்சியில் கட ந்கதேர்தலில்போட்டியிட்ட திரு வி. ஆனந்தசங்கரி, சம சமாஜக் கட்சியிலிருந்து வெளியேறிவிட்டதாலும், இந்தமூன்று கட்சிகளும் ஆட்சி மன்றத்துக்கு சிறு பான்மை பிரதிநிதியொரு வரை அனுப்புவதற்கு தமி ழர் ஒத்துழைக்க முடியும் என சிறிபான்மைத் தமிழர் மகாசபையைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர்தெரிவித் தார்

சகல அரசியல் கட்சிகளும் அடுத்த தேர்தலில் புதிய அபேட்சகர்களை கிளிநொச் சியில் நிறுத்தாமல் அத் தொகுதியை சிறுபான்மை தமிழருக்கு விட்டுக்கொடுக்க முன்வரவேண்டும் என்றும் அவர் கூறினார்.

# ''54- ம் ஆண்டு தீர்மானம் இன்றுதான் நிறைவேறியது'

## பிரசவ விடுதி திறப்புவிழாவில் உரை

யாழ்ப்பாணம், புதன்

1954-ம் ஆண்டு நான் மாநகரசபை உறுப்பினராக இருக்கும்போது கொண்டு வரப்பட்ட தீமானம் நிறை வேற்றப்பட்டு இன்று தான் அது செயல்படுத்தப்படுகின் றது. இந்த பிரசவ விடுதிச் சிகிச்சை நிலையம் இப்பகுதி ஏழைமக்களுக்கு ஓர் வரப் பிரசாதமாகும்.

நல்லூர் வட்டார மாநகர சபை உறுப்பினரான வைத் தியர் அ. நடராஜாஇவ்வாறு தெரிவித்தார்.

நல்லூர் வட்டாரத்திற் கான பிரசவ விடுதியும் சிகிச்சைநிலையமும் நேற்று முன்தினம் காலை யாழ். நகர முதல்வர் திரு. எஸ். நாக ராஜாவினால் திறந்துவைக் கப்பட்டது

வைத்தியர் அ. நடராஜா இவ்வைபவத்தில் மேலும் பேசுகையில் சிகிச்சை நிலை யத்தில் முதல் குழந்தைகளு க்கும், பிரசவத்தாய்மார் களுக்கும் சிகிச்சை அளிக் கப்படும் என்றும் காலகதி யில் இது ஒரு பூரண பிரசவ விடுதியாக மாற்றப்படும் என்றும் சொன்னார்.

மற்றும் பல மாநகரசபை அங்கத்தவர்கள் பேசினார் கள். திருமதி தங்கராசா ஆசிரியை நன்றி தெரிவித் துப் பேசினார். (கா. நி)

கைகலப்பு

# சமரசமாகத் தீர்ந்தது

யாழ்ப்பாணம், புதன்

கொய்யாத்தோட்டத்தில் வீதிஒன்றுக்கு பெயர் வைப் பதில் கிறிஸ்தவ, சைவமக்க ளுக்கிடையே அண்மையில் நிகழ்ந்த கைகலப்பு சுமுக மாக தீர்த்து வைக்கப்பட் டதாக பொலிசார் தெரிவித் தனர்.

கரையூர் பொலிஸ் நிலை யத்தைச்சேர்ந்த கான்ஸ்ட பிள் கிருஷ்ணராசா யாழ்ப் பாண பொலிஸ் நிலையத் தைச்சேர்ந்த கான்ஸ்டபிள் சொலமன் ஆகிய இருவரும் இவ்விசாரணையில் ஈடுபட்டி ருந்தனர். தலைமைக்காரியா லயஇன்ஸ்பெக்டர்திருமாணி க்கம் தலைமையில்நடை பெற்ற இவ்விசாரணையில் வீதியின் பெயர் வைக்கும் விடயம் சமரசமாகத்தீர்த்து வைக்கப்பட்டது. (தே. நி)

# 'எமது பனைகளை நினைத்து சந்தோஷம்'

கோப்பாய், செவ்.

''எமது நாட்டுக் கற்பக தருவான பனை மரங்களு க்கு தென்னிலங்கையில் மதிப்பு அதிகரித்துள்ளதைக் கண்டு பெருமகிழ்வடைகி றேன் இது நமக்கு ஏற் பட்ட ஒரு பேரதிர்ஷ்டம் என்றே கூறலாம். இச் சந் தர்ப்பத்தை நாம் தவற விடக் கூடாது. இனிவருங் காலத்திலாவது நமது பனை மரங்களை நாம் அழிய விடாது அவற்றை தேவை யற்ற முறையில் வெட் டாது காப்பாற்ற முன் வருவதவசியம்'' என கோப் பாய் சரணபவாநந்த வித்தி யாசாலையில் நடைபெற்ற மரம் நாட்டு வைபவத்தில் பேசுகையில் வலி. கிழக்கு காரியாதிகாரி திரு. வி. கந் தப்பிள்ளை கூறினார்.

கோப்பாய் கிராம முன் னேற்றச் சங்கத் தலைவர் திரு. கே. ஆர். குமாரசாமி இவ் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

# இரு விண்வெளிக் கலங்களை ரஷ்யா அனுப்பியது

மாஸ்கோ, நவ 25

ரஷ்யா ஆளில்லாத விண் வெளிக் கலங்கள் இரண்டை இன்று விண்வெளிக்குஅனுப் பிவைத்துள்ளது.

இந்த இரு கலங்களும் வெவ்வேறு தூரத்தில்வலம் வந்து கொண்டிருக்கின்றன.

ரஷ்யா தொடர்ந்து விண் வெளி ஆராய்ச்சியை நடத் திக் கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது

## அப்பலோ-13

வாஷிங்டன்

அமெரிக்காவின் அப் பலோ-13ன் அடுத்த சந்திர பயணம் 1970 மார்ச்மாதம் நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது

அப்பலோ-12 வீரர்கள் கொண்டுவந்த சந்திரப் பாறைகளும், சர்வேயர்-3ன் பகுதிகளும் ஹூஸ்டன் கட் டுப்பாட்டு நிலையத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறது

## எதிரி விடுதலை

மல்லாகம், செவ்.

களவு வழக்கொன்றின் எதிரியை விசாரணையின் பின்னர் மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமார சாமி விடுதலை செய்து தீர்ப் பளித்தார்.

இளவாலையைச் சேர்ந்த கந்தையா என்பவரின் கடைக்குள் பட்டப்பகலில் புகுந்து 1800 ரூபா ரொக் கப் பணத்தை திருடியதாக யாழ்ப்பாணம் வாசியான பெனடிற் என்ற வாலிபர் சங்கானைப் பொலிஸாரால் இவ்வழக்கில் குற்றஞ்சாட் டப்பட்டிருந்தார்.


தற்பொழுது அச்சில்...

ஏராளமான தகவல்கள்

நவீன அமைப்பு

ஈழநாடு

தினக் குறிப்புகள்

1970

★ ஈழநாடு POCKET DIARY

(one week to an opening) 75 சதம்

★ ஈழநாடு மாணவர் தினக்குறிப்பு

ரூபா 1-15 சதம்

★ ஈழநாடு தினக்குறிப்பு

(வழமையானது) ரூபா 1-35 சதம்

'ஈழநாடு' பத்திரிகை ஏஜண்டுகளுக்கும் வியாபாரிகளுக்கும் விசேஷ கழிவுகள் தரபபடும்.

விபரங்களுக்கு:

தினக் குறிப்பு 1970,
த. பெ. எண். 49,
ஈழநாடு,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

யாழ்ப்பாணப் பட்டினத்தில் ஓர் டாக்டரின் வைத்தியசாலையில் வேலைபார்க்க ஆட்கள் தேவை. பிணைப் பணம் கட்டக்கூடிய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல: 1563, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1563

## விற்பனைக்கு

காணி:

தெற்கு மானிப்பாய் லோட்டன் ரோட்டில் 4 பரப்பு 15 குழி கிணறு வான் பயிர் உட்பட பரப்பு ரூபா 3000/-. நா. மயில்வாகனம், சிவசக்தி, ஆனைக்கோட்டை. 1566

தையல்மெஷின்:

நல்ல நிலையில் உள்ள மில்லர் தையல் மெஷின் 3 லாச்சி உள்ளது. விலை ரூபா 550/- நா. மயில்வாகனம், சிவசக்தி, ஆனைக்கோட்டை. 1567

எமது நிலையத்தில் மாணவத் தாதிமரைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் 6—10 சத முத்திரைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். நிர்வாகி, அறிவியல் கல்லூரி, பலாலி வீதி, திருநெல்வேலி. 1557

## காணவில்லை

ஒரு பச்சைக்கைப் பையுடன் சில முக்கியமான றஸ்தாக்கள் 22-11-69 காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். 1564

## விளம்பரம்

லொறிச் சாரதி ஒருவர் தேவைப்படுகின்றது. இலங்கைப்பிரசையும், பிரஜா உரிமை பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

வயது:- 30—45 உள்பட.

தகைமைகள்:- (1) லொறி ஓட்டுவதற்குத் தகைமையுள்ளவர்கள்.

(2) கல்வித் தராதரம் குறைந்தது 7-ம் வகுப்பு சித்தி பெற்றிருக்கவேண்டும்.

(3) இயந்திரப் பழுது பார்க்கும் பயிற்சி உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

வேதனம்:- எல்லாப் படிகளும் உட்பட மாதம் ரூபா 210/-

பிணைப்பணம்:- ரொக்கப் பிணை: ரூபா 500/- ஆதனப் பிணை ரூபா 1,000/-.

ஏற்கனவே இப்பதவிக்கு மனுப்பண்ணினவர்கள் இந்த நிபந்தனைகளுக்கொப்பப் புதிதாக மனுப்பண்ணலாம்.

விண்ணப்பங்கள் 30-11-69க்குள் பதிவுத் தபாலில் காரியதரிசி, புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

ஆ. கந்தையா,
கௌரவ காரியதரிசி
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை,
20-11-69. 1831


## வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி

ரவிச்சந்திரன்- காஞ்சனா நடித்த

**அதே கண்கள்**



## வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

தென்னகத்திரைகளில்
100 நாட்களுக்குமேல் ஓடிய
வெற்றிச்சித்திரம்

# எதிர்நீச்சல்

[illegible] ஜெய்சங்கர்-விஜயகுமாரி


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 26—11—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 நிலையஒலிப்பதிவுகள், கள், 5-45 அஸான்.

இரவு 6-15 வாத்தியஇசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடக இசை, 7-35 பேச்சு, 7-45 நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நாதஸ்வரம், 9-30 உரையாடல், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## மரண அறிவித்தல்

ச. எள்ளுப்பிள்ளை

ஏழாலை மேற்கு தம்பர் சபாபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், டிம்புலை P. W. D. ஓவர்சியர், S. தம்பாபிள்ளையினதும், சுன்னாகம் இந்திரபவான் மில்க் பார் S. சுந்தரம் அவர்களினதும் தாயாருமாகிய எள்ளுப்பிள்ளை சிவபதமடைந்துள்ளார். அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (26-11-69) புதன்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். சுன்னாகம் இந்திரபவான் உரிமையாளர், ஏழாலை மேற்கு, சுன்னாகம். 1565

## ஏழாலை கி. ச. திறப்பு விழா

மல்லாகம், செவ்வாய்

ஏழாலை கிராமசபையின் [illegible]

# மகாஜனா—யாழ். கோஷ்டி நாளை மோதுகின்றன

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மாவட்டக் கல்லூரிகளிடையே மிகவும் பலம் கொண்ட உதைபந்தாட்டக் கோஷ்டிகளில் ஒன்றான தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி நாளை 'யாழ்ப்பாண தலைவர் தெரிவுக் கோஷ்டி' யுடன் தெல்லிப்பளையில் மோதவிருக்கின்றது.

மகாஜனக் கல்லூரிக் கோஷ்டி கடந்த மூன்று வருடங்களாக, யாழ். பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தொடர்ந்து ''சாம்பியனாக'' வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நாளை யாழ். தலைவர் கோஷ்டியுடன் மோதவிருக்கும் மகாஜனக் கோஷ்டிக்கு செல்வன் மோகன்ராம் தலைமை தாங்குகிறார்.

இப்போட்டி மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

(தே நி)

# நாவலர் குருபூசைத் தின கட்டுரைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையாரால் நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் கீழ்க்கண்டவர்கள் பரிசு பெற்றுள்ளனர். இவர்களுக்குரிய பரிசுகள் டிசம்பர் முதலாந்திகதி யாழ்ப்பாணத்தில், நாவலர் சபையால் கொண்டாடப்படும் நாவலர்விழாவில் வழங்கப்படும்.

முதற்பரிசு: தங்கப்பதக்கமும், ரொக்கப்பணம் 100 ரூபாவும் செல்வி செ ஜெகதாம்பா, இந்துக் கல்லூரி கொக்குவில்,

இரண்டாம் பரிசு: தங்கப் பதக்கமும் ரொக்கப் பணம் 75 ரூபாவும். செல்வி தேவகுஞ்சராம்பாள் ஜெகராசா. கனகரத்தினம் மகா வித்யாலயம், யாழ்ப்பாணம்

மூன்றும்பரிசு: தங்கப்பதக்கமும் ரொக்கப் பணம் 50 ரூபாவும் செல்வி இ. பிருந்தா, சந்திரேய மகளிர்மகா வித்தியாலயம் நாவலப்பிட்டி.

10 பாராட்டுப் பரிசுகள் பெறுவோர்:-செல்வி கௌரி மனோகரி திருநாவுக்கரசு வேம்படி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம், செல்வன் எம். எஸ். முகம்மதுரசாக் சர்வகலாசாலைப்போதனாகழகம் கொழும்-10, செல்வன் வ திருச்செல்வம் மத்தியகல்லூரி யாழ்ப்பாணம். செல்வன் சி சுதந்திரராசா, மத்திய கல்லூரி யாழ்ப்பாணம் செல்வன் எஸ் எஸ் ஜெயசிங் சகிராக்கல்லூரிகம்பளை செல்வன் த குகேந்திரன் சிவானந்த வித்தியாலயம், கல்லடி உப்போடை மட்டக்களப்பு, செல்வி ரதி ராசமாணிக்கம் பட்டிருப்பு மகா வித்தியாலயம் களுவாஞ்சிக்குடி, செல்வன் நா சண்முகலிங்கம் மகாஜனக்கல்லூரி தெல்லிப்பழை, செல்வன் சி இராசா கரணவாய் மகா வித்தியாலயம் கரவெட்டி, செல்வன் பெ ஐயாத்துரை தமிழ்வித்தியாலயம், பலாங்கொடை.

## சுதந்திரக்கட்சி வெற்றி

கண்டி, செவ்வாய்

அம்புகமுவ வடக்கு கிராமசபைக்கான புதிய தேர்தல் அண்மையில் நடைபெற்றது

மொத்தம் பதினைந்து வட்டாரங்களில் ஸ்ரீ.ல.சு. கட்சி வேட்பாளர்கள் எட்டு வட்டாரங்களிலும், ல. ச. ச. கட்சி வேட்பாளர்கள் இரண்டு வட்டாரங்களிலும், சுயேச்சையாளர்கள் ஐந்து வட்டாரங்களிலும் வெற்றி பெற்றுள்ளனர்.

## தீர்மானம் தோல்வி

ஊரதீவு, செவ்வாய்

அல்லைப்பிட்டிக் கிராமசபையின் தலைவர் திரு. செ தவவிநாயகம் மீது கிராமசபைப் பணத்தை துஷ்பிரயோகம் செய்தார் என்ற காரணம் காட்டி மேற்படி கிராமசபையின் நான்கு அங்கத்தவர்களால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்தது.

கிராமசபையில் ஐந்து அங்கத்தவர்களே இருந்த போதும் தீர்மானத்தை அனுப்பியவர்களில் ஓர் அங்கத்தவர் யாழ்ப்பாணம் உள்ளூராட்சிஉதவி ஆணையாளரால் கூட்டப்பட்ட கூட்டத்துக்குசமுகம் கொடுக்காததால்பிரேரணை நிறைவேறவில்லை.

தலைவரைப்பதவி இறக்க அங்கத்தவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினரின் சம்மதம் வேண்டுமாதலால் பிரேரணை நிறைவேறவில்லை.



## இன்னிசைக் கச்சேரி

இலங்கை-இந்திய வானொலிப் பாடகர் சங்கீத வித்துவான் திரு. ஏ. கே. கருணாகரன் வருகிற 30-ல் திகதி யாழ்ப்பாணத்தில் இன்னிசைக்கச்சேரி ஒன்றை நடாத்துகிறார். வீரசிங்கம் மண்டபத்தில் அன்று மாலை இந்நிகழ்ச்சி இடம்பெறும்.

## தேவி கோட்டம் வென்றது

அல்லைப்பிட்டி, செவ்வாய்

தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச் சங்கத்தினரால் திரு. எஸ். சிவகடாட்சத்தின் வெற்றிக்கேடயத்திற்காக நடாத்தப்பட்டுவரும் தாச்சி சுற்றுப்போட்டியில் வேலணை தேவி கோட்டம் ஜன சமூக நிலைய விளையாட்டுக்கோஷ்டியினரும், வேலணை மேற்கு மகேஸ்வரி சனசமூக நிலைய விளையாட்டுக்கோஷ்டியினரும் மோதிக்கொண்டபோது 12-2 புள்ளிகளால் தேவி கோட்டம் வெற்றிபெற்றது.

## கைதடிக்கு புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணம், புதன்

பொதுமாரமத்து இலாகா யாழ். மாவட்ட பொறியிலாளர் கைதடி பஸ் பிரயாணிகள் சங்க இணை செயலாளர் திரு. ச. இராமலிங்கத்துடன், கைதடி வடக்கு ரோட்டை பார்வையிட்டு, முதலாம் மைல் வரைக்கும் பஸ் விடலாமென சிபார்சு செய்துள்ளார்.

இத்துடன் கைதடி பிள்ளையார் கோவில் ரோட்டில் 5 தொன் பஸ் ஓட அனுமதி வழங்கியுள்ளார்.

கைதடி பஸ் பிரயாணிகளின் சங்க இணைச் செயலாளரின் தலைமையில் இச் சங்க பிரதிநிதிகள் தேசிய மய அமைச்சரை கூடிய கெதியில் பேட்டி கண்டு இவ் திட்டத்தை அமுல் நடாத்தும்படி கோர எண்ணியுள்ளனர்.

# இன்றைய பலன்

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

கார்த்திகை மாதம் 11-ம் திகதி (26-11-69)

**மேஷம்**- மதிப்பு உயரும். பொதுமக்கள் ஆதரவும் கிடைக்கும். புத்திரரால் புகழும் உண்டு. புதினமும் கேட்பீர்.

**ரிஷபம்**- துன்பத்தின் ரேகைகள் நிழலாட்டம்போடும். துணைவரின் உடல்நலம் கெடும். பணமும் பெருமளவில் செலவாகும்.

**மிதுனம்**- அவசரபுத்தியினால் விபரீதங்கள் விளையலாம். கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும்.

**கடகம்**- துள்ளிவரும் வெள்ளிப்பணம் தொடர்புகளை பெருகவைக்கும். தள்ளிவைத்த மக்கள் உம்மை அள்ளி அணைத்திடுவர்.

**சிம்மம்**- இருள்மண்டிக்கிடக்கும் இன்று ஏமாற்றம் தாக்கும், குடும்பத்தில் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

**கன்னி**- இதயத்தை தொடும் சம்பவங்கள் இடம் பெறும். சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடுசெய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

**துலாம்**- அரசியலில் ஆர்வம் பிறக்கும். பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும். இதன்மூலம் சிரமங்களும் தென்படலாம். சிலருக்கு எதிர்பாராதவகையில் அதிர்ஷ்டமும் கிடைக்கும்.

**விருச்சிகம்**- உறவாடிக் கெடுப்பதற்கும் பகையாழிகள் வருவார். உற்சாகம் குன்றும். பிரயாணத்தின் போது பொருள் தவறக் கூடும். சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

**தனுசு**- குடும்ப வழியால் மனதுக்கு நின்மதி பிறக்கும். நீண்டநாள் பூமிப் பிணக்கு சமரசமாக முடிவடையும். காதல் விவகாரங்களுக்கு இடம் உண்டு. சிறப்பான தினம்.

**மகரம்**- செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும். சதி செய்வதற்கு சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர். பிரயாணத்தை தவிர்க்கவும் இறை நம்பிக்கை நன்று.

**கும்பம்**- தரும காரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள். சுற்றுடலில் மதிப்பு உயரும் புண்ணிய ஸ்தலம் ஒன்றுக்கு யாத்திரை மேற்கொள்ளப் படலாம். தெய்வத்தின் துணை உண்டு.

**மீனம்**- தங்கக் குணம் மேலிடும் தக்க மதிப்பும் கிடைக்கும். இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும். உழைப்பினால் பலனும் உற்சாகமும் பிறக்கும். முன்னேற்றமான தினம்


## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்

எழுதிய நூல்கள், ஆராய்ந்து பதிப்பித்த நூல்கள்

* ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களைப் பற்றி எழுதப்பட்ட நூல்கள் மற்றும்
* நாவலர் நூற் கண்காட்சியில் இடம் பெற்ற நூல்கள் அனைத்தும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**ரகுநாதன் பதிப்பகம்**

307, காலிவீதி, கொழும்பு-13.

தொலைபேசி 26946

1838


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெற்றிச்சித்திரம்

# எதிர்நீச்சல்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெய்சங்கர்-விஜயகுமாரி முத்துராமன்-வாணிஸ்ரீ நடித்த

# டீச்சரம்மா

மாதர்கள் எல்லா வகுப்புகளுக்கும் அரைக் கட்டணத்துடன் அனுமதிக்கப்படுவர்.

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

ஜெமினி - சரோஜாதேவி எஸ்.எஸ் ஆர்.-ராஜசுலோஜனு நடித்த

# குலவிளக்கு

## இன்றுமுதல்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.

பிரிபோயா, போயா 4 காட்சிகள்

★ ரவிச்சந்திரன்
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ்
★ சோ
★ ஆனந்தன்
★ குமாரி சச்சு
★ மனோரமா
★ தேவகி

நடித்த

முக்தா பிலிம்ஸாரின்

# நினைவில் நின்றவள்

இசை வி. குமார் — கதைவசனம் சோ — டைரக்ஷன் வி. சீனிவாசன்

யாளர், ஏழாலை மேற்கு, சுன்னாகம். 1565

## ஏழாலை கி. ச. திறப்பு விழா

மல்லாகம், செவ்வாய் ஏழாலை கிராமசபையின் புதிய அலுவலகத் திறப்பு விழாவும், புன்னாலைக்கட்டுவன் வடக்கில் நிறுவப்பட்டுள்ள விளையாட்டு அரங்கு அடிக்கல்நாட்டு விழாவும் ஜனவரி மாத முற்பகுதியில் நடைபெறவிருக்கின்றன. உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாஸ, தேசியமய சேவை விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வி. ஏ சுகததாஸ ஆகியோரை இவ்வைபவத்திற்கு அழைப்பதற்கான முயற்சிகளில் கிராமசபைத் தலைவர் திரு. க. சிவகுரு ஈடுபட்டுள்ளார்.

## ஒத்திவைப்பு

மல்லாகம், செவ்வாய் சங்கானைப் பொலிஸ் கான்ஸ்டபிள் சந்திரரத்னவை சுட்டுக்கொலை செய்ய எத்தனித்ததாக தொண்டமானாறு வாசியான கே. வடிவேலு என்பவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு மேல் விசாரணையை மல்லாகம் மாஜிஸ்திரேட் ஜனவரி மாதம் 8-ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.


வல்வெட்டித்துறை

**றஞ்சனா தியேட்டர்**

தினசரி 2-30 6-30, 9-30.
சுந்தரராஜன் - பத்மினி பேபிராணி நடித்த

**குழந்தைக்காக**

**ஸ்ரீ காலிங்கா**
இணுவில்
தினசரி ,6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
நாகேஷ்—கல்பனா நடித்த

**சாது மிரண்டால்**

**REGAL** JAFFNA
Daily 4-45, 7, & 9-45 p.m.
Dean Martin, Stella Stevens
in
THE SILENCERS
(Adults)

**MANOHARA**
Daily 4-45, 7 & 9-45, P. M.
Poya days 10-30 a m

7 WINCHESTORS FOR A MASSACRE
(Dollar Series)


...மொத்தம் பதினைந்து வட்டாரங்களில் ஸ்ரீ.ல.சு. கட்சி வேட்பாளர்கள் எட்டு வட்டாரங்களிலும், ல.ச.ச. கட்சி வேட்பாளர்கள் இரண்டு வட்டாரங்களிலும், சுயேச்சையாளர்கள் ஐந்து வட்டாரங்களிலும் வெற்றி பெற்றுள்ளனர்.

...ஆலையை எரால் கூட்டப்பட்ட கூட்டத்துக்குசமுகம் கொடுக்காததால்பிரேரணை நிறைவேறவில்லை.

தலைவரைப்பதவி இறககஅங்கத்தவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினரின் சம்மதம் வேண்டுமாதலால் பிரேரணை நிறைவேறவில்லை.

கைதடி பஸ் பிரயாணிகளின் சங்க இணைச் செயலாளரின் தலைமையில் இச் சங்க பிரதிநிதிகள் தேசிய மய அமைச்சரை கூடிய கெதியில் பேட்டி கண்டு இவ்திட்டத்தை அமுல் நடாத்தும்படி கோர எண்ணியுள்ளனர்.


**ரகுநாதன் பதிப்பகம்**
307, காலிவீதி, கொழும்பு-13.
தொலைபேசி 26946
1838




MF

# 10,000 அதிகமான மசி-பேர்குசன்

## ட்ராக்டர்கள், நாடெங்கிலும் தலைசிறந்த சேவை வசதி கொண்டவை

நாடெங்குமுள்ள இருபத்திநான்கு விநியோகஸ்தர் மூலம் 10,000 மசி-பேர்குசன் ட்ராக்டர்கள் கவனம் பெற்று, பதில் உறுப்புகள், ரூ. 10 கோடி பெறுமானம் பின் கொண்டு செயலாற்றுகின்றன.

அலவ்வ — விவசாய இயந்திர பொறிவளாளர்
அலுபோமுல்ல — ட்ராக்டர், கார் சேவை ஸ்தாபனம்
அம்பலாந்தொட்டை — 'ரிலையபில்', மோட்டார் ட்ராக்டர் என்ஜினியர்ஸ்
அம்பாரை — பிரவுண் அன் கம்பனி லிமிட்
அனுராதபுரம் — டி. எஸ். குணசேகர அன்சன்ஸ்
பதுளை — சென்றல் மோட்டர்ஸ்
மட்டக்களப்பு — கீழ்மாகாண விவசாய கூட்டுறவுச் சங்கம் லிமிட்
புத்தளம் — சென்றல் மோட்டர்ஸ்
ஹட்டன் — ஹட்டன் போக்குவரத்து சக ஏஜன்சி கம்பனி லிமிட்
ஹிங்குராக்கொட — த. அக்ரிகொலா
கட்டுகஸ்தோட்டை — பிரவுண் அன் கம்பனி லிமிட்
காரைதீவு — கிழ்-மாகாண விவசாய கூட்டுறவுச் சங்கம் லிமிட



கொச்சிக்கடை — மோட்டார் சக ட்ராக்டர் என்ஜினியர்ஸ் லிமிட்
குருநாகலை — பிரவுண் அன் கம்பனி லிமிட்
மாத்தறை — த. ரிலையபில் மோட்டார் தொழிற்சாலை
முல்லைத்தீவு — ஸ்டான்டர்ட் என்ஜினியரிங் வேர்க்ஸ்
நிக்கரவட்டிய — "ஃபாமர்ஸ்"
பாலாவி — தி அக்ரிகோலா
பரந்தன் — பிரவுண் அன் கம்பனி லிமிட்
திருக்கதிஸ்வரம் — திருக்கதீஸ்வரம் என்டபிரைசஸ்
திச்சமஹாரகம — ரிலையபில் மோட்டர் அன் ட்ராக்டர் என்ஜினியர்ஸ்
திருகோணமலை — குயிக் பிளவ்ஸ் (ஆர் அன்பீ) லிமிட்
வவுனியா — பிரவுண் அன் கம்பனி லிமிட்
வெரகன்தொட்ட — மெடரட்ட டீலர்ஸ்

**பிரவுண் அன் கொம்பெனி லிமிட்டேட்**
விவசாயப் பிரிவு,
தேவநம்பியதீசன் வீதி, கொழும்பு 10
டெலிபோன் 93097.

GRANT 422 1059



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரண சூரிய கிரகணம் ஒன்றை அப்பல்லோ - 12 வீரர் பார்த்தனர்

## பூமிக்குத்திரும்பியதும் புதிய பட்டங்களை நிக்ஸன் வழங்கினுர்

ஹுஸ்டன், நவம்பர் 25

**சந்திரமண்ணில் இரண்டாவது தடவையாக காலடி வைத்து விஞ்ஞான ஆய்வுகள் நடத்திய பின் அப்பல்லோ-12 வீரர்கள் இன்று அதிகாலை தமது பத்துநாள் பிரயாணத்தின் இறுதிக் கட்டமாக பசுபிக் சமுத்திரத்தில் பத்திரமாக வந்திறங்கினுர்கள்.**

அப்பல்லோ-12 வீரர்கள் சார்ல்ஸ் கொன்ருட், அலன் பீன், ரிச்சார்ட் கோர்டன் ஆகிய மூவரும் பசுபிக்சமுத்திரத்தில் வத்திறங்கிச் சில நிமிடங்களில் ஹெலிகாப்டர் மூலம் மீட்கப்பட்டனர். அதன்பின் ஏறத்தாழ ஒரு மணி நேரத்துக்குள் மீட்புக்கப்பலுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டனர்.

கப்பலில் அப்பல்லோ-12 வீரர்கள் மூவரும் ஆரவாரத்தோடு வரவேற்கப்பட்டனர். முகமூடிகளும் விசேஷ உடைகளும் அணிந்துகொண்டிருந்த அவர்கள் கப்பலில் கூடியிருந்தவர்களுக்குக் கைகளை ஆட்டித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

அவர்கள் அதிக நேரம் வரவேற்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியவில்லை சில நிமிடங்களுக்குள் கப்பலிலுள்ள தனி அறைக்குள் அனுப்பப்பட்டனர். இவ்வாறே அவர்கள் இருபத்தொரு நாட்களுக்கு தனித்துவைக்கப்பட்டிருப்பார்கள்.


சந்திரனிலிருந்து தொற்று நோய்க் கிருமிகள் இவர்களோடு வந்திருக்கலாம் என்பதாலேயே இப்படித் தனித்து வைக்கப்படுகிருர்கள்.

அப்பல்லோ-12 வீரர்கள் மூவரும் நல்ல உடல் நிலையிலிருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஹைனர்ஸ்ட் கப்பலில் இருக்கும் இவர்கள் ஹவாய்க்குக் கொண்டு போகப்படுவார்கள். அங்கிருந்து விமான மூலம் ஹுஸ்டனுக்கு வருவார்கள். ஹுஸ்டனில் தொடர்ந்து தனி அறையில் 21 நாட்கள் முடியுமட்டும் இருப்பார்கள்


அப்பல்லோ-12 வீரர்கள் தம்முடன் சுமார் 100 ருத்தல் எடையுள்ள சந்திரப் பொருட்களையும் சந்திரனில் கிடக்கும் அமெரிக்க சர்வேயர்-3ன் சில பாகங்களையும் தம்முடன் கொண்டுவந்திருக்கிருர்கள்.

இன்று அதிகாலை சுமார் 2 மணியளவில் பூமியின் காற்றமுக்க மண்டலத்துக்குள் நுழைவதற்கு முன்னர் தமது தாய்க்கலத்தின் கடைசி ரொக்கட்டை வெடிக்கச்செய்து அதிலிருந்து தாம் தங்கியிருக்கும் பேழைப் பகுதியைப் பிரித்துக்கொண்டார்கள், அந்தச் சமயத்தில் அந்தப் பேழை மிக வேகமாக காற்றுமண்டலத்துக்குள் நுழைந்து அதன் வெட்பம் 2760 பாகை சென்டிகிரேட்டாக அதிகரித்து வெறும் அக்கினிக்குழம்பாகக் கிளம்பியது. அதன்பின் அதன்

### சந்திரக்கலம்



### அப்பல்லோ-12



இம்மாதம் 14-ம்திகதி சந்திரனுக்கு அப்பல்லோ-12 கலம் செலுத்தப்படுவதற்கு முன்னர் அதனை விண்வெளிக்கு எடுத்துச்சென்ற சட்டர்ன்-V ஏவுகணையின் உச்சியில் பொருத்தப்பட்ட நிலையில் கென்னடி முனையிலுள்ள ஏவுகணை தளத்தில் தயாராய் இருப்பதை இங்கு காணலாம்.

அப்பல்லோ-12 வீரர்களான சார்ல்ஸ் கொன்ருட், அலன்பீன், ரிச்சார்ட் கோர்டன் ஆகிய மூவரும் பசுபிக்கில் இறங்கி மீட்புக்கப்பலுக்குப் போய்ச்சேர்ந்த சற்று நேரத்துக்கெல்லாம் அதிபர் நிக்ஸன் அவர்களுடன் டெலிபோனில் தொடர்புகொண்டு, அவர்களுடன் அவர்களைப் பாராட்டினுர். இந்தப் பயணத்தை அவர்கள் வெற்றிகரமாகச்செய்து முடித்தது பற்றித் தாம் பெரிதும் பெருமைப்படுவதாக திரு. நிக்ஸன் கூறினுர்

## இந்திராகாந்தி கண்ணீர் விட்டார்

புதுடில்லி, நவ. 25


இந்திரா தலைமையிலான அ.இ.க. கமிட்டி மகாநாடு புதுடில்லியில் நடைபெற்றபோது பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தன்னைக் காரியக் கமிட்டியில் இருந்து விலக்கியதைப் பற்றிப் பேசும்போது குரல் கம்மி கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.

''நான் முதலில் விலக்கப்பட்டேன். அதுவும் பதவியிலிருந்து மட்டுமல்ல, கட்சியிலிருந்தே விலக்கப்பட்டேன்'' என்று இந்திராகாந்தி கண்ணீருக்கிடையில் கூறினுர்.

## அபிஷேக முதலாவது ஆண்டு விழா

யாழ் மேற்றிராசனத்தின் துணை ஆயராக நியமனம் பெற்ற வண. எல். ஆர். அன்ரனி ஆண்டகையின் மேற்றிராணித்துவ அபிஷேகத்தின் முதலாவது ஆண்டு விழா அண்மையில் கொண்டாடப்பட்டது.

## செயற்கைக் கோள் செலுத்தும் விண்மேடை



பூமியை வலம்வந்தபடியே செயற்கை கோள்களை செலுத்தும் விண்மேடை யொன்றின்பட இது. இதன் மூலம் கிரகசஞ்சாரங்களில் ஈடுபடும்செயற்கைகோள்களுக்கு மனிதர்களையும் பொருட்களையும் எடுத்துச் செல்லமுடியும். 1970-1980 ஆண்டளவில் விண்வெளிப் பயணங்களுக்கு பயன்படுத்துவதற்காக அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ந்துவரும் மாதிரிகளில் இதுவும் ஒன்று.

## 'சின்டிக்கேட்' காங்கிரஸ் மாநாடு முன்னதாகவே நடைபெறும்

புதுடில்லி, நவ 25

இந்திரா சார்பு காங்கிரஸ் தலைவர்கள் பம்பாயில் நடத்தவிருக்கும் காங்கிரஸ் மகாநாட்டுக்கு முன்பதாகவே திரு நிஜலிங்கப்பா ஆதரவாளர்கள் தமது மாநாட்டை ஆமதாபாத்தில் நடத்த முடிவு செய்திருக்கிருர்கள்.

புதுடில்லியில் நடைபெற்ற இந்திராசார்பு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களும் ஆமதாபாத் மாநாட்டில் அனுமதிக்கப் படுவார்களென்றும் ஒரு சிலர்மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் திரு நிஜலிங்கப்பாகூறினுர்,

டிசம்பர் மாதம் 19, 20 21-ம் திகதிகளில் இந்த மாநாடு நடைபெறலாம் என்று திரு நிஜலிங்கப்பா கூறினுர்.

இந்திரா சார்பு காங்கிரஸ் கட்சியின் இடைக்கால தலைவர் திரு சி சுப்பிரமணியம் நேற்று பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியை சந்தித்து ஆலோசனைகள் நடத்தினுர். புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் அ. பா. கா, கமிட்டி உறுப்பினர்களையும் அவர் சந்த்திதுப் பேசினுர்.

## பிரதமர் இந்திராவுக்கு டி. டி. கே. ஆதரவு

புதுடில்லி, நவ. 25

இந்திராகாந்தி ஒரு தனிப்பட்ட நபர் இல்லை. 52 கோடி மக்களைக் கொண்ட தேசத்தின் தலைவர் அவர். இந்தியாவின் நிலையான தன்மையின் சின்னம் மட்டுமல்ல உலகின் நிலையான தன்மையின் சின்னமும் அவர்தான்'

புதுடில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கொடியேற்றி வைத்துப் பேசுகையில் பழைய டில்லி மந்திரி திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'மக்கள் ஆத்திரம் அடையாமல் இருக்கவேண்டும். எல்லாத் தரப்புகளிலும்இப்போது ஆத்திரமூட்டும் போக்கு இருந்தாலும் கூட ஜனநாயகத்தின் வேரினை வெட்ட முயற்சிப்பதுதான் மிகவும் மோசமான செயலாகும்' என்று திரு டி. டி. கே. மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

## வீதி திருத்தம்

மண்டைதீவு. திங்கள்

கடந்த பன்னிரண்டு வருடங்களாக பகிரங்க வேலைப் பகுதியினரால் பொறுப்பேற்கப்பட்டு இதுவரை காலமும் திருத்தப்படாதிருந்த மண்டைதீவு கிழக்கு அம்மன்கோவில் பிரதான வீதி திருத்தியமைக்கப்படவிருக்கிறது, தீவுப்பகுதி எம். பி. திரு வ. நவரத்தினம் இவ் வீதி திருத்துவதில் கவனம் செலுத்தி வருகிருர்.

இலங்கையர் ஒருவர்

## உலகின் முதல் குருட்டு டாக்டர்


கோட்டை, திங்கள்

மருதானையிலுள்ள அந்தோனி பேர்ளுட் என்ற குருட்டு மாணவன் உலகிலேயே முதல்குருட்டுடாக்டராகலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவிலுள்ள ஆராய்ச்சி நிலையத்தில் திரு பேர்ளுட் தனது வைத்திய படிப்பை அடுத்த ஜனவரியில் ஆரம்பிக்கவுள்ளார். பியூட்ரோ றிக்கோவிலுள்ள குருடர்களுக்கு வைத்தியக்கல்வி அளிப்பதற்கான ஆராய்ச்சி நிலையமொன்று நிறுவப்பட்டுள்ளது. தனது கல்வி நிகழ்ச்சிகளை கவனமாக கற்றுக் கொள்வாரானல் திரு பேர்ளுட் தனது வைத்தியக்கல்வியை வெற்றிகரமாக முடித்துக்கொள்வாரென மேற்படி நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



சந்திரத் தரையை ஆராய்வதற்காக எதிர்காலத்தில் இம்மாதிரி சந்திரக் கலங்களிலேயே பயன்படுத்துவார்கள். ஒருவர் தனியாகவே செலுத்தக்கூடிய இந்தக் கலத்துக்கு 'ஃப்லீப்' என்று பெயர். இதன்மாதிரியொன்று வட அமெரிக்காவில் ரொக்லெப் ஸ்தாபனத்தாரால் உருவாக்கப்பட்டு வருகின்றது.

சமயத்தில் அந்தப் பேழை மிக வேகமாக காற்றுமண்டலத்துக்குள் நுழைந்து அதன் வெட்பம் 2760 பாலை செண்டிகிரேட்டாக அதிகரித்து வெறும் அக்கினிக்குழம்பாகக் கிளம்பியது. அதன்பின் அதன் அழகான 'பாரசூட்' குடைகள் விரிவதையும் மிக பவ்வியமாக பசுபிக்கில் இறங்குவதையும் டெலிவிஷனில் ஆயிரக்கணக்கானவர்கள் பார்த்தனர்.

அப்பல்லோ-12 பிரயாணிகள் தமது பயணத்தின் இறுதிக் கட்டத்தில் முழு சூரியகிரகணம் ஒன்றைப் பார்த்ததாக அறிவித்தார்கள்.

அந்தச்சமயத்தில் பூமியின் பல கோணத்தோற்றங்களின் அழகை அவர்கள் வர்ணிக்க வார்த்தைகள் இல்லாமல் தவித்தார்கள். இந்தப்பயணத்தில் கண்ட காட்சிகளில் இதுவே மிகவும் அற்புதமானது என்று பீன் கூறினர்

அதிபர் நிக்ஸன் அவர்களுடன் டெலிபோனில் தொடர்புகொண்டு, அவர்களுடன் அவர்களைப் பாராட்டினர். இந்தப் பயணத்தை அவர்கள் வெற்றிகரமாகச்செய்து முடித்தது பற்றித் தாம் பெரிதும் பெருமைப்படுவதாக திரு. நிக்ஸன் கூறினர்

அப்பல்லோ-11 வீரர்கள் இவ்வாறு பசுபிக் கடலில் வந்திறங்கிய சமயம் அவர் கப்பலுக்கு வந்து நேரடியாக வீரர்களுடன் பேசினர் என்பது குறிப்பிடத்தக்கது. அப்பல்லோ-12 செலுத்தப்பட்ட சமயம் திரு. நிக்ஸன் நேரடியாக ஹூஸ்டனுக்குப்போய் அந்தக் காட்சியைப் பார்த்தார்

அப்பல்லோ-12 வீரர்கள் சார்ல்ஸ் கொன்ருட், அலன் பீன், ரிச்சார்ட் கோர்டன் ஆகிய மூவருடனும் டெலிபோனில் தொடர்புகொண்டு பேசிய அதிபர் நிக்ஸன் அவர்கள் மூவருக்கும் புதிய பட்டங்களை வழங்கியிருப்பதாக அறிவித்தார். சொமாண்டர்களாகவிருக்கும் இம் மூவரும் கெப்டன்கள் தரத்துக்கு உயர்த்தப்பட்டிருப்பதாக அதிபர் அறிவித்தார்.

### யுதாண்ட் பாராட்டு

அப்பல்லோ-12 இறங்கும் காட்சியை டெலிவிஷனில் ஐ.நா.தலைமைக் காரியதரிசி யுதாண்ட் டெலிவிஷனில் பார்த்தார். அதன்பின் அதிபர் நிக்ஸனுடன் தொடர்புகொண்டு தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

### டாஸ் செய்தி

அப்பல்லோ-12 வீரர்கள் பூமிக்குத்திரும்பிய சிலமணிநேரத்துக்குள் சோவியத் செய்தி ஸ்தாபனமாக டாஸ் அந்தச்செய்திகளைவிபரமாக வெளியிட்டது. அப்பல்லோ-12 வீரர்களை மிகவும் துணிச்சல் மிக்கமனிதர்கள் என்று டாஸ் பாராட்டியது.

பயணங்களுக்கு பயன்படுத்துவதற்காக அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ந்துவரும் மாதிரிகளில் இதுவும் ஒன்று.

வீதி திருத்துவதில் கவனம் செலுத்தி வருகிருர்.

காரிகள் தெரிவித்துள்ளனர்.

# அணு ஆயுதப் பரவல் தடை பிரகடனம்

நியுயோர்க், நவ. 25

அணு ஆயுத பரவல் தடை பிரகடனத்தில் அமெரிக்காவும் சோவியத்யூனியனும் கையெழுத்திட்டிருக்கின்றன.

ஏற்கனவே பிரிட்டன் இதி கையெழுத்திட்டுவிட்டது

இந்தப் பிரகடனத்தை உருவாக்கிய மூன்றுவல்லரசுகளும் இப்பொழுது இதில் கையெழுத்து வைத்துவிட்டன.

இந்தப் பிரகடனத்தின்படி அணுஆயுதங்களை வைத்திருக்கும் நாடுகள் அணு ஆயுதம் வைத்திருக்காத நாடுகளுக்கு அவைகளைக் கொடுக்கப்படாது. அதுபோலவே அணு ஆயுதம் வைத்திருக்காத நாடுகள் அணு ஆயுதம் வைத்திருக்கும் நாடுகளிடம் அவைகளை வாங்கவும் கூடாது. ஆனல் அணுஆயுதங்களை வைத்திருக்கும் பிரான்சும், சீனவும் இந்தப்பிரகடனத்தில் கையெழுத்திடவில்லை. அணு ஆயுதம் வைத்திருக்காத நாடான இந்தியாவும் இதில் கையெழுத்திட மறுத்துவருகின்றது.

இதுவரையில் 20 நாடுகள் வரை இந்தப்பிரகடனத்தை ஏற்றுக்கொண்டிருக்கின்றன.

வரிச்சலுகை:

## சுதந்திரா குற்றச்சாட்டுக்கு கருணநிதி பதில்

சென்னை, நவ: 25

''நான் வருமான வரிச்சலுகை கேட்கும் அளவுக்கு இல்லை. அப்படி அதிக வருமானமும் எனக்குவருவது மில்லை. என்னுடைய பதவியை என்னுடைய தனிப்பட்ட சலுகைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் பண்பும் எனக்கில்லை.''

டெல்லி மேல்சபையில் சுதந்திரக் கட்சி உறுப்பினர் மிஸ்ரா பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணநிதி ''வருமானவரி'' சலுகை கேட்டதாக குறிப்பிட்டார். அதற்கு மறுப்புத் தெரிவிக்கும்வகையில்பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசுகையில் முதலமைச்சர் கருணநிதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

''அறநெறி போதிக்கப்படவேண்டும் என்றும் அரசியலில் தார்மீக நெறி உருவாக்கப்படவேண்டும் என்றும் ராஜாஜி கூறிவருகிருர். அப்படி இருக்க அவருடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் இப்படிப் பேசியுள்ளது எனக்குவியப்பைத்தருகிறது என்று திரு கருணநிதி மேலும் குறிப்பிட்டார்.

தென்வியட்நமில்

## 109 பேரை கொலைசெய்தாரம்

### அமெரிக்க அதிகாரி விசாரிக்கப்படுகிருர்

சைகோன், நவ. 25


தென் வியட்நமில் பொதுமக்களில்பலரைக் கொலைசெய்ததாகக் கூறப்படும் அமெரிக்க ராணுவ லெஃப்டினன்டான வில்லியம் கொல்லிஎன்பவர் ராணுவக் கோர்ட்டினுல் விசாரிக்கப்படவிருக்கிருர்.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட 109 பேரைக் கொலை செய்ததாக இவர் மீது விசாரணை நடைபெறும். இது சம்பந்தமாக அதிபர் வான்தியூஏற்கனவே ஒரு விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிருர்.

## மவுன்ட்ரோட் இனிமேல் 'அண்ணுசாலை'

சென்னை, நவ. 25

சென்னை மவுன்ட் ரோட்டுக்கு 'அண்ணுசாலை' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. சென்னை மாநகரசபை இந்த முடிவை செய்திருப்பதாக தமிழ்நாடு முதல்வர் திரு. கருணநிதி அறிவித்திருக்கிருர்.

## நிகரற்ற கவர்ச்சிப் பெண்ணுக நிச்சய வழி—
## கோயா பெர்பியூமும் கோலோனும்




உங்கள் பெண்மையின் மென்மை வனப்பை மேலும் வனப்பாக்க, நம்பத்தகுந்த நறுமண வாசனைத் திரவியங்கள் கோயா பெர்பியூமும் கோலோனும்.

உலகின் உன்னத வாசனைத் தயாரிப்பாளர்கள் தனித்தனிச் சிறப்புடன் சீர் செய்தளிக்கும் எழு மனங்கவர் நறுமணங்கள் கொண்ட கோயா பெர்பியூமும் கோலோனும், நாகரிக மாநகர் தோறும் வசீகர வனிதையரால்விரும்பித் தேர்ந்தெடுத்துப்பாவிக்கப்படுவன.

நாள் முழுதும் நீடித்த நறுமணந் தரும் பரிமளமான கோயா பெர்பியூமும் கோலோனும், நாள்தோறும் பாவியுங்கள்.

பிளாக் ரோஸ், கார்டினியா, என்டைஸ், நம்பர் 5, லவ் அஃபயர், டைம்லஸ், வைல்ட் சில்க்.

லண்டன், பரிஸ், நியூயார்க், மாநகரங்களில் மகிமை பெற்றது கோயா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மனிதன் என்ருல் வெறும் அறிவு மாத்திர மல்ல; அல்லது ஸ்தூல உடலோ, உணர்ச்சியோ அல்ல. அறிவு, உடல், உணர்ச்சி ஆகிய மூன்றும் அழகிய முறையிலே ஒன்று கூடினுல் தான் மனிதன் ஆகிருன்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் கார்த்திகை மாதம் 11-ந் திகதி (26-11-69)


## திரு சமரக்கொடியின் பேச்சு

புரட்சிவாத சமசமாஜக் கட்சியின் தலைவரான திரு எட்மண்ட் சமரக்கொடி சென்ற வாரம் யாழ்ப்பாணத்திலே பேசிய ஒரு முக்கியமான பேச்சின் சாராம்சத்தை "ஈழநாடு" பிரசுரித்திருந்தது. அந்தப் பேச்சு ஒரு முக்கியமான தலைவரின் கருத்துக்கள் மட்டுமல்ல, நம் நாட்டின் அரசியல் பிரச்னைகளின் முக்கியமான பல அம்சங்களையும் தமிழரைப் பற்றிய சில பிரச்னைகள் சம்பந்தப்பட்டதாகவும் உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. நமது தேசிய, தமிழர் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான யோசனைகள் அதில் அடங்கியுள்ளதாலும், பேசியவரின் முக்கியத்துவத்தைக் கருதியும், விரிவாக இல்லாவிடினும் ஒருசில கருத்துக்களை இங்கு வெளியிட விரும்புகிறோம்.

முதலாவது திரு. சமரக்கொடி அவர்கள் தமிழரின் நல்ல நண்பர். தமிழரின் இலட்சியங்கள்பால் பொதுவாக அனுதாபமுள்ளவர். தமிழ்பேசும் மக்களுக்காக நியாயம்வழங்க தம்மாலான முயற்சியெல்லாம் செய்தவர். தமிழருக்கு மிக நெருக்கடியான நிலைமை ஏற்பட்ட சமயத்திலே அவர் தமிழருக்காக மனம்விட்டு ஆணித்தரமாக ஆட்சிமன்றத்தில் பேசியதை மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் நாம் நினைவுகூருகின்றோம். அவர் கூறும் வேலைமுறைகளையும், வழிவகைகளையும் பற்றி ஏற்படக்கூடிய கருத்துவேற்றுமைகள் என்ன இருப்பினும் அவர்மீது நமது மதிப்பையும் மரியாதையையும் அது எவ்விதத்திலும் பாதிக்க முடியாது. இனி அவர் கூறியுள்ள சில முக்கிய கருத்துக்களை சற்றே கவனிப்போம்.

முதலாவதாக தீண்டாமையை ஒழிக்கும் விஷயத்தில் இதுவரை இலங்கையிலே போதிய முயற்சிகள் செய்யப்படவில்லையென்றும் சாதிமுறை என்று கூறப்படும் ஓர் ஏற்பாட்டினை

வருகை தந்தார். அந்தக் உத்தமரின் அரிய பேச்சுகளை நேரில் கேட்டபின்பும் கூட, இந்தியாவிலிருந்து இதே விஷயமாக அவர் எழுதியும்பேசியும்வந்ததைப் படித்தும்கூட அவர்அத்திய வழக்கத்தை ஒழிக்கச்செய்த பெருமுயற்சிகளை அறிந்தும் கூட, இலங்கை மக்களிடையே, இதுபற்றிப் போதிய மனமாற்றம் ஏற்படவில்லை. இது மிகவும் வருந்தத்தக்க நிலையாகும். மகாத்மா காந்தியின் அரிய உபதேசங்களை இலங்கை இவ்விஷயத்தில் பின்பற்றத் தவறிவிட்டது. திரு. சமரக்கொடி கூறுவதுபோல் இலங்கையிலுள்ள பல அரசியல்கட்சிகளும், தலைவர்களும், சாதி முறையால் விளைந்துள்ள வேற்றுமைகளையும் கேடுகளையும் குறைக்கவோ ஒழிக்கவோ தக்கவற்றைச் செய்யவில்லை.

வாழ்க்கையிலே உள்ள பல தீமைகளையும் கேடுகளையும் ஒழிக்கவோ குறைக்கவோ எடுக்கும் எந்த முயற்சியும், ஜனநாயக ஆக்கமுறையிலேயே, சமாதான வழியிலேயே இருக்கவேண்டுமென்பதே நமது விருப்பம் நேரடி நடவடிக்கைகளையும் பலாத்கார புரட்சியையும்விட, சமாதான வழியே சிறந்ததென்பது எமது கருத்து.

நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் இவ்விஷயங்களைப் பற்றியும் திரு. சமரக்கொடியவர்கள் பேசியிருக்கிருர்கள், நிலவுடைமை, செல்வத்தின் விநியோகம், தனிஉடமை தொழிலாளருக்கும் முதலாளிகளுக்குமிடையே பல்வேறு உரிமைகள் பற்றிய தகராறுகளை மத்திய வழியிலே தீர்க்க வேண்டியது அவசரமும் அவசியமுமாகும். இந்த மத்திய சமரசவழியே நாட்டின் தேசீய இலட்சியங்கள் பற்றிய பல பிரச்னைகளைத் தீர்ப்பதிலும் சிறந்தவழியாகுமென்பதே "ஈழநாட்"டின்

# நாவலர் வாரம் ஏன்?

— ஐ. தி. சம்பந்தன் —

(உதவிச் செயலாளர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்சபை)

சைவமும் தமிழும் தழைத்துஓங்க நம்வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து அரும்பெரும் தொண்டாற்றிய நல்லைநகர் நாவலர் நினைவுதினத்தை இதுகாறும் ஆண்டுதோறும் கொண்டாடி வந்தோம். அவர்ஆற்றிய அளப்பரிய தொண்டினையும் பணிகளையும் நினைவுகூரவோ விளக்கிக் கொள்ளவோ ஏனையோர் அவரது அறிவுரைகளை அறிந்து கொள்ளவோ ஆண்டில் ஒரு நாள் போதுமானது அன்று. நேர்மையோடு நிறைந்த உள்ளத்துடிப்போடு அறநெறித் துறையிலும் நிறைந்த பணியாற்றிய அப்பெரியாரின் தினத்தை குறைந்தது ஆண்டில் ஒருவாரமாகுதல் கொண்டாடி பெருமைபடுத்தாவிடில் அவர் புரிந்த தொண்டினை அறிந்துகொள்ளவோ போதனைகளை விளங்கிக் கொள்ளவோ கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தவோ ஓர் தினம் போதுமானது அன்று.

இந் நோக்கினை கருத்தில் கொண்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை நாவலர் நினைவு தினத்தை நாவலர் வாரமாகக் கொண்டாட வேண்டுமென ஒரு பொது வேண்டுகோளை விடுத்திருந்தனர், அவ் வேண்டுகோளுக்கு பொதுமக்கள் தகுந்த மதிப்புக் கொடுத்தனர், இலங்கையடங்கிலும் மட்டக்களப்பு திருக்கோணமலை, மூதூர், பதுளை, அட்டன், நாவலப்பிட்டி, பண்டாரவளை, கம்பளை, கண்டி, மாத்தளை, புசல்லாவை, நீர்கொழும்பு சிலாபம், கொட்டககலை பேராதனை லுணுகலை கலிஎல, வவுனியா, மன்ஞர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் 150க்கு மேற்பட்ட நிறுவனங்கள் இவ்வாரத்தை வெகு சிறப்பாக கொண்டாடின பலதுறையினரும் நாவலர் பற்றி அறிந்து கொள்ள பெரும் வாய்ப்பு ஏற்பட்டது. நாவலர் வாரம் கிராம மக்களிடையே ஒரு புரட்சியையும், நகர மக்களிடையே ஒரு எழுச்சியையும் உருவாக்கிற்று, இதனுல் தமிழ் உணர்ச்சியும் சைவசமயப் பற்றும் மக்களிடையே மிளிர்ந்து காணப்பட்டன.

அன்று அந்நியர் ஆதிக்கத்தாலும் பிறமதமோகத்தாலும் தங்களது இன மத கலாச்சாரத்தை அடியோடு மறந்து அடங்கி ஒடுங்கி இருந்த மக்களை தட்டி எழுப்பி அவர்களிடையே

சிலைநாட்டு விழாவும் நாவலர் மகாநாடும் யாவரும் பாராட்டும் வகையில் மிகச் சிறப்பாக நடைபெற வழிவகுத்தது நாவலர் வாரமே. பரந்த அடிப்படையில் கொண்டாடப் பட்ட நாவலர் வாரம் நாவலர் ஒரு தேசிய வீரர் என்ற நிலையை நிரூபணமாக்கியது. பலசமயத்தவர்களும் ஆற்றிய நற்பணிக்ளை பராட்டும் அளவுக்கு நல்லதோர் சூழ்நிலையை உருவாக்கியது: நாவலரது இலட்சியங்களையும் கோட்பாடுகளையும் நடைமுறைக்கு கொண்டுவர நாவலர் வாரம்வழிவகுத்தது, நாவலர் பற்றிய சிந்தனை எல்லா நெஞ்சங்களிலும் நிலைகொண்டன. ஒவ்வொரு பள்ளிக் கூடங்களிலும் மூலை முடுக்குகளிலெல்லாம் அம் மாபெரும் தலைவரின் நாமம் புது மெருகுடன் ஒலிக்க துவங்கின. அவர் மறைந்து 90 ஆண்டுகளுக்குப் பின்ளரேனும் அவர் காட்டிய, கடைப்பிடித்து ஆற்றிய பணிகளை நினைவு கூர்ந்து பெருமை கொள்ள நாவலர் வாரம் சிறந்த சந்தர்ப்பமாக அமைந்தது.

சைவ சமயத்தின் கோட்பாடுகள் என்னவென்பதை அறிந்து சைவசமயத்தின் புனிதத் தன்மையை பேணவும் கடைப்பிடித்து ஒழுகவும் நாவலர் வாரம் வழி காட்டுகிறது.

இவ்வாண்டு நாவலர் வாரத்தை சிறப்புடன் கொண்டாடுவதற்கு பல சிறப்பு அம்சங்கள் புகுத்தப்பட்டு இருக்கின்றன, மாணவர்களின் இதயத்தில் நாவலரின் நற் கருத்தையும் நல் உபதேசத்தையும் அற நெறிகளையும் வேரூன்றச் செய்ய வேண்டியது அவசியமாகும். இதனைக் கருத்தில் கொண்டு இலங்கையடங்கலிலும் உள்ள பள்ளிக்கூட மாணவர்கள் இடையே கட்டுரைப் போட்டி ஒன்றினை விரிவான அடிப்படையில் நடத்துவத்றகு தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. எல்லா மாணவர்களும் ஆர்வத்தோடும் அக்கறையோடும் பங்கு கொள்வதற்கு உற்சாகமூட்டும் முகமாக ஆயிரம் ரூபா பரிசில்களை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்

கோணத்திலும் நல்லூராய்ச்சி நடத்த நாவலர் வாரம் வழிவகுத்துள்ளது.

நாவலர் வாரத்தைநாடெங்கும் சிறப்பாக கொண்டாட நாவலர் உருவப்படத்தை ஆங்காங்கு அனுப்புவதற்கு நாவலர் சபை ஏற்பாடு செய்கிறது. நாவலர் உருவத்தை நேரில் தரிசித்து அவர் நினைவு விழாவை கொண்டாடுவதனுல் மக்களிடையே ஒரு உற்சாகத்தை ஏற்படுத்துவதாகும்.

நாவலர் வாரத்தை யொட்டி குரு பூசைகள் பல இடங்களில் நடைபெற பெரும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராமப்புறங்களில் உள்ள பள்ளிக்கூடங்களிடையே நாவலர் நினைவுப் பேச்சுப் போட்டிகள் கட்டுரைப் போட்டிகள் ஆகியன நாவலர் வாரத்தை யொட்டி நடைபெற அவ்வவ்விடங்களில் ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகின்றன.

நாவலர் தேசிய வீரர் வரிசையில் வைக்க வேண்டுமென நடைமுறைத் தமிழ் இயக்கம் விடுத்திருக்கும் வேண்டுகோளுக்கு நல்லாதரவு பெருக அரசு அதனை சிந்திக்க நாவலர் வாரம் ஒரு தூண்டுகோலாக அமைந்து இருக்கிறது.

நாவலர் பெருமான் நினைவாக முத்திரை வெளியிட வேண்டும் என்ற பொது ஜன அபிப்பிராயத்தை நாவலர் வாரம் உருவாக்குகிறது. நாவலர் யாவருக்கும் ஒரு பொது மனிதன் அனைவராலும் போற்றப்பட வேண்டியவர். ஆட்சியாளரிஞல் பெருமைப்படுத்தப் படவேண்டியவர் என்பதை நாவலர் வாரம் வற்புறுத்தி நிற்கிறது.

ஆண்டு தோறும் நாவலர் வாரத்தை சிறப்போடு கொண்டாட பல புதிய திட்டங்களை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை உருவாக்கியிருக்கிறது. அவ்வப்போது அத் திட்டங்கள் வெளியிடப்படும்.

## இராமநாதன் நினைவுதினம்

பம்பலப்பிட்டி, செவ்

சேர்பொன் இராமநாதன் நினைவுதினம் நாளை 26-ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. வழக்கறிஞர் திரு ஏ. சி நடராசா தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் உபசபாநாயகர் திரு எம் சிவசிதம்பரம் திரு ஏ.ஈ. பெர்ஞண்டோ, வழக்கறிஞர்கள் வி.குமாரசாமி யூ எஸ். எம் பாறூக் எஸ், சரவணமுத்து, கே. எஸ் மகேசன் முதலியோர் பேசுவர்,

கூட்டணியினருக்கு

## பொதுத்தேர்தல் சின்னம்

கோட்டை, திங்கள்

கூட்டணியைச்சேர்ந்தசுதந்திரக்கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியமூன்றுகட்சிகளும் எதிர்வரும் தேர்தலில் தங்கள் தேர்தல் சின்னமாக ஒரே சின்னத்தையே ஏற்றுக் கொள்ள விருப்பதாகத்தெரிகிறது.

## பக்திவழிபாட்டின் அவசியம்

உடுப்பிட்டி, திங்கள்

இன்றைய வாலிபர்கள் சமயக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளவோ அல்லது வாழ்க்கையில்பின்பற்றவோ தயங்குகிருர்கள். இதனுலேயே வாலிபர்கள் மனத்தில் நிம்மதி தோற்றுவது இல்லை. சஞ்சலமான வாழ்வைப் போக்க பக்தி வழிபாடு அவசியம் என பருத்தித்துறை ஸ்ரீசாரதா நிலையச் சேவாச்சிரமப் பொதுச் செயலாளர் திரு.இரத்தின சபாபதி ஸ்ரீமுத்துக்குமாரசாமி கோவிலில் சமயச் சொற்பொழிவாற்றுகையில் கூறிஞர்.

## 1000 புதிய பஸ்கள்

கோட்டை, திங்.

அடுத்த வருட நடுப் பகுதியில் இ போ. சவுக்கு 1000 புதிய பஸ்கள் வந்து சேரவிருக்கின்றன. இ.போ. சவின் நேர அட்டவணைக்கு போதிய சேவையிலீடுபடுத்த இந்த 1000 பஸ்களும் போதுமானவையென இ. போ. ச. அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ஐயாறன் எழுதுவது..

உடுப்பிட்டியிலே ஒரு வீட்டிலே யாரும் இல்லாத சமயத்தில் இரு சிறுவர்கள் புகுந்து, சாப்பிட்டுவிட்டு, ஒரு ரேடியோப் பெட்டியைத் திருடிச்சென்றதாக நேற்று வெளியான செய்தியைப் படித்ததும், சிறு வயதிலே இவனும்செய்த சில திருட்டுகள் நினைப்பு வந்தன. நல்லவேளையாகப் பிடிபடவில்லை. பிடிபட்டுயாரும் தண்டித்திருந்தால் மனக்கசப்பால் என் வாழ்க்கையே வேறுவிதமாக மாறி இருக்கக்கூடும்

வீட்டில் நுழைந்த அவ்விரு சிறுவர்களும் முதலில் சாப்பிட்டார்களாம்! பாவம்! வயிற்றுக்கில்லாத கொடுமை. இந்தமாதிரி இன்னும் எவ்வளவு சிறுவர்களோ!

விலைமதிப்புள்ள அந்த ரேடியோவை இரண்டு ரூபாய்க்கு விலைபேச அச்சிறுவர்கள் முயற்சித்துப் பிடிபட்டிருக்கிருர்கள். அந்த இரண்டு ரூபாய்க்கும் அவர்கள் என்ன செய்ய நினைத்தார்களோ! வேறு என்ன இருக்கும். அன்று ஏதாவது படம் பார்க்கலாமென்றுதான். செல்வந்தர் வீட்டுக் குழந்தைகளானுல் வசதியாக மாதத்தில் பல படங்களைப் பார்க்கமுடியும். ஆனுல் எளிய குடும்பக்குழந்தைகளுக்கு அந்த வாய்ப்பேது?

இக்காலத்துப் படங்களை பார்க்காமல் இருப்பதே நல்லதென்று சிலர் வாதிக்கலாம். அது வேறுவிஷயம். ஆனுல் படங்களைவிட்டால், குழந்தைகள் உள்ளிட்டு பல மக்களுக்கும், பொழுது போக்கவோ மனதுக்கு மகிழ்ச்சி அளிக்கவோ வேறென்னவழி?

சிறுவர்களின் வயதை உத்தேசித்து, வீட்டுச் சொந்தக்காரரின் சம்மதத்தின் பேரில் அவர்களை எச்சரித்து விடுதலை செய்தனராம். நல்லவேளை அவ்விரு எளிய குழந்தைகளையும், நீதிமன்றத்தில் நிறுத்தி சீர்திருத்தப்பாடசாலைக்கு அனுப்பியிருப்பின், அவர்களது மனம் உடைந்து, வாழ்க்கையே குட்டிச்சுவராகியும் விடலாம் அப்படிச் செய்யாமல் அவர்களை விடுதலைசெய்தவர்களைப் பாராட்டுகிறேன்.

ஆனுல் இத்துடன் அச்சிறுவர்கள் உள்ளிட்டு, அவர்களைப்போன்று சமூகத்திலுள்ள பல சிறுவர்களின்

டும் அவர்கள் திருடத்தான் வேண்டுமா? சமூகம் இந்தமுக்கிய பிரச்னைக்கு அளிக்கும் பதிலென்ன?

அன்பு முறையிலே இந்தப் பிரச்னைக்குச் சரியான வழியைக் காணுவிடில், பலாத்காரரப் புரட்சி ஏற்படுவதை எப்படித் தடுக்கமுடியும்? தனி ஒருவனுக்கு உணவிலையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று அமரகவி பாரதியாரும், "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்" என்று திருவள்ளுவப் பெருந்தகையும் கூறியுள்ள வாக்குகளும் நமக்குச் சரியான எச்சரிக்கைகளல்லவா?

0 0 0

பம்பாய் 'பவான்ஸ் நர்னல்" சஞ்சிகையின் ஆசிரியரான திரு கே. எம். முன்ஷிக்கு ஓர் அன்பர் எழுதிய கடிதத்தில் "தாங்கள காலதேவனை ஏமாற்றுவதாகத் தெரிகிறது. உடலும் மனமும் இளமை மிளிர்கின்றதே. அதன் ரகசியமென்ன?" என்று கேட்டிருந்தார். அதற்கு முன்ஷி அவர்கள், எழுதியுள்ளபதில் வருமாறு:—

"காலதேவனை நன் ஏமாற்றி வருவதாக நினைக்கவில்லை. அப்படிச் செய்ய முடிய வேண்டும் என்பதே என் விருப்பம். என் அனுபவப்படி, என் உடலும் மனமும் திடமாக இருப்பதற்குக் காரணம், குறைந்த உணவு, சிறிதுதேகப்பயிற்சி கூடுமான தூக்கம். இத்துடனே வாழ்க்கையின் பல அம்சங்களிலும்மனத்தளப்பமில்லாத ஆர்வம். எல்லாவற்றையும்விட, துக்கப்படுவது பாவம் என்றுணர்ந்து, அவற்றைத்தவிர்க்கஎல்லாம் செய்வதுடன் தெய்வத்தின் விருப்பத்துக்குப்பணிந்துஎல்லாவற்றையும்விட்டுவிடுவது உயர்ந்த 'டானிக்,காகஇருக்கின்றது".

0 0 0

ஊனத்தை நீக்கி உலகறிய வென்னை ஆட்கொண்டவன், தேனைத்து எனக்கினியான் தில்லைச் சிற்றம் பலவனென்கோன், வானத்தவருய்ய வன்னஞ்சை உண்ட கண்டத்திலங்கும், ஏனெத்தெயிறு கண்டாற் பின்னைக்கண்கொண்டு காண்பதென்னே"

—அப்பர் அடிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்களை சற்றே கவனிப்போம்.

முதலாவதாக தீண்டாமையை ஒழிக்கும் விஷயத்தில் இதுவரை "இலங்கையிலே போதிய முயற்சிகள் செய்யப்படவில்லையென்றும் சாதிமுறை என்று கூறப்படும் ஓர் ஏற்பாட்டினுல் சுமத்தப்பட்டுள்ள பல சங்கடங்களையும், அநீதிகளையும் குறைக்கவோ அல்லது நீக்கவோ தக்க ஏற்பாடுகள் செய்யப்படவில்லையென்றும் அவர் கூறியுள்ளதை நாம் வெகுவாக ஒப்புக்கொள்ள வேண்டும். பல நூற்றுண்டுகளாக இலங்கையில் இந்த சாதிமுறை இருந்துவருவதுடன் இப்போதும்கூட அனுஷ்டிக்கப்படுகிறது. அந்த முறையால் ஏற்படும் பாதகங்கள் இன்னும் நீடிக்கவே செய்கின்றனவென்பதை மறுப்பதற்கில்லை.

இலங்கையிலே தீண்டாமையை முதல்முதல் எதிர்த்துப் பேசியவர் உலகம் போற்றும் உத்தமரான மகாத்மா காந்தியாவார். 1927-ம் வருடம் அவர் இலங்கைக்கு விஜயம்செய்தபோது யாழ்ப்பாணத்துக்கும் கள் பற்றிய தகராறுகளை மத்திய வழியிலே தீர்க்கவேண்டியது அவசரமும் அவசியமுமாகும். இந்த மத்திய சமரசவழியே நாட்டின் தேசிய இலட்சியங்கள் பற்றிய பல பிரச்னைகளைத் தீர்ப்பதிலும் சிறந்தவழியாகுமென்பதே ''ஈழநாட்''டின் கருத்தாகும். நமது இலட்சியங்களை அடைய நேரடி நடவடிக்கைகளையும் பலாத்கார முறைகளையும் விட, சமாதான ஜனநாயக வழிகளே நாட்டுக்கும், மக்களுக்கும் அதிகம் நீடித்த நன்மைகளைப் பயக்கக்கூடியதாக இருக்குமென்று நம்புகிறோம். திரு. சமரக்கொடி போன்ற ஒரு சிறந்த தலைவர் இன்றைய நிலைமை பற்றி தமது மனப்பான்மை குறித்தும் புனராலோசனை செய்து நமது மேற்குறித்த கருத்துக்களைப்பற்றி சிந்திக்க வேண்டுகிறோம். இலங்கையின் எதிர்காலத்துக்கும் சிங்களவர் - தமிழர் பற்றிய சங்கடமான உறவுகளை சீர் செய்வதற்கும், அவர் மட்டுமன்றி அவரது சகாக்களின் உயரிய பணிகள் மேலான உதவியாக இருக்கும்.

பற்றும் மக்களிடையே மிளிர்ந்து காணப்பட்டன. அன்று அந்நியர் ஆதிக்கத்தாலும் பிறமதமோகத்தாலும் தங்களது இன மத கலாச்சாரத்தை அடியோடு மறந்து அடங்கி ஒடுங்கி இருந்த மக்களை தட்டி எழுப்பி அவர்களிடையே ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தினுர் நல்லை நாவலர். அதேபோன்று சோர்வுற்று தூங்கிக்கொண்டிருந்த இன்றைய மக்களிடையே நாவலர் வாரம் ஒரு விழிப்புணர்ச்சியையும் எழுச்சியையும் ஏற்படுத்தி சைவத்தின் பெருமையையும் தமிழின் உயர்வையும் அறிந்துகொள்ளும் பெரும் வாய்ப்பினையும் ஏற்படுத்தியது. நாவலர் வாரத்தால் உருவாக்கப்பட்ட உற்சாகமும் உணர்ச்சியும் நாவலர் சபை திட்டமிட்ட மிக முக்கிய பணிகள் பல, மிகச் சிறப்புடன்நிறைவேற வழி வகுத்தன.

யில் நடத்துவதற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. எல்லா மாணவர்களும் ஆர்வத்தோடும் அக்கறையோடும் பங்கு கொள்வதற்கு உற்சாகமூட்டும் முகமாக ஆயிரம் ரூபா பரிசில்களை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இக் கட்டுரை போட்டி மாணவர்களிடையே ஒரு சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் என்பதில் ஐயம் இல்லை. நாடெங்கும் சிதறுண்டு இருக்கும் தமிழார்வம் கொண்ட மாணவர்களை ஒருமுகப்படுத்தி நாவலர் பற்றி நாற்

கூட்டணியைச்சேர்ந்தசுதந்திரக்கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியமூன்றுகட்சிகளும் எதிர்வரும் தேர்தலில் தங்கள் தேர்தல் சின்னமாக ஒரே சின்னத்தையே ஏற்றுக்கொள்ள விருப்பதாகத்தெரிகிறது.

கூட்டணிக்கட்சித்தலைவர்கள் கடந்த சில நாட்களாக இத்தேர்தல் சின்னம் பற்றி ஆலோசனை நடத்தியுள்ளதாகவும் விரைவில் சுமுகமான ஒரு முடிவுக்கு வருவார்கள்எனவும் தெரிகிறது. கூட்டணிக்கட்சிகள் எல்லாவற்றிற்கும் பொதுவான

...இ. போ. சவுக்கு 1000 புதிய பஸ்கள் வந்து சேரவிருக்கின்றன. இ. போ. சவின் நேர அட்டவணைக்கு போதிய சேவையிலீடுபடுத்த இந்த 1000 பஸ்களும் போதுமானவையென இ. போ. ச. அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வருட முடிவிற்குள் 300 புதிய பஸ்கள் நாட்டின் பல பகுதிகளிலும் சேவையிலீடுபடுத்தத் தயாராகவுள்ளன.

தொரு தேர்தல் சின்னத்தை தத்தேர்ந்தெடுப்பதற்குத் தேர்தல் சட்டம் இடம் கொடுக்குமாம்.

குட்டிச்சுவராகியும் விடலாம் அப்படிச் செய்யாமல் அவர்களை விடுதலை செய்தவர்களைப் பாராட்டுகிறேன்.

ஆனுல் இத்துடன் அச்சிறுவர்கள் உள்ளிட்டு, அவர்களைப்போன்று சமூகத்திலுள்ள பல சிறுவர்களின் பிரச்னை தீரமுடியுமா? பசித்தால் அவர்கள் என்ன செய்வார்கள். சினிமாச்சாலைகளுக்குமுன் பல விளம்பரப் படங்களைப் பார்த்துவிட்டு. தாங்களும் உள்ளே சென்று பார்க்கவேண்டுமென்று ஏங்கமாட்டார்களா! மீண்

இனியான் இல்லைச் சிறம்பலவனென்கோன், வானத் தவருய்ய வன்னஞ்சை உண்ட கண்டத்திலங்கும், ஏனெத்தெயிறு கண்டாற் பின்னைக்கண்கொண்டு காண்பதென்னே''

—அப்பர் அடிகள்.

## பூஜையில் புதிய முறை

பண்டத்தரிப்பு, செவ்.

இரண்டாம் வத்திக்கான் சங்க முடிவுகளை செயற்படுத்தும் நோக்குடன் இம் மாதம் 30-ம் திகதி தொடக்கம் திவ்விய பூசைப்பலியில் மேலும் சில மாற்றங்கள் நடைமுறைக்கு வரவிருக்கின்றன. மக்கள் சிறந்த முறையில் ஆராதனைகளில் பங்கு பற்றவும் நேரத்தைச் சுருக்கவுமே இம் மாற்றங்கள் திருச்சபை அதிகாரிகளினுல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## உருவப்படம் திரைநீக்கம்

ஊரதீவு, திங்கள்

புங்குடுதீவுகட்டிடக்கலைப் பயிற்சி நிலயத்தில் காலஞ்சென்ற தொழிற்கமிஷனர் அமரர் பி. டி. ராஜாவின் உருவப் படம் திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளது. புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக்கழகமும் சிவலப்பிட்டி சன சமூக நிலையமும் கூட்டாக ஒழுங்கு செய்திருந்த இவ் விழாவுக்கு புங்குடுதீவு கிராமசபைத் தலைவர் கா மதியாபரணம் ஜே. பி. தலைமை வகித்தார். திரு. சச்சிதானந்தம் உருவப் படத்தை திரைநீக்கஞ்செய்தார். மு. மயில்வாகனம் வழக்கறிஞர். ப. கதிரவேலு சு. யோ. பூராசா ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்.

## யாழ். மாநகர...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேயர் எடுத்துக் கூறினுர் இச்சமயத்தில், இதுபற்றி சபை தீர்மானிக்க வேண்டுமென திரு கே வி தெய்வேந்திரம் கூறினுர் நிதிக்கமிட்டியின் சரிபற்றிய தீர்மானத்தை ஒத்திவைப்பதாக மேயர்தெரிவித்தார். இதனை தொடர்ந்து சபையில் சூடான வாதங்கள் இடம் பெற்றன.

அங்கத்தவர்களுக்கு வாய்பூட்டுச்சட்டம்போடக்கூடாதென்றும், ஒவ்வொருவருடமும், வரிவிஷயத்தில் சபைவிரும்பியபடி செய்யலாம் என்றும் திரு. தெய்வேந்திரன் கூறினுர்.

வரி குறைக்கப்படுமா, இல்லையா? என்பது பற்றி சபை முடிவு செய்யவேண்டுமென்றும் வரியைப்பற்றி ஆராயக்கூடிய குழு வரிகளை குறைக்கவில்லையென்றும் அவர் மேலும் சொன்னுர்.

தமிழரசு தமிழ்க்காங்கிரஸ் கூட்டுசேர்ந்து வரியைக் கூட்டியிருக்கிருர்களென்றும்; இரண்டு கட்சிகளுக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண வரியிறுப்பாளர்கள் தகுந்தபதிலளிப்பார்களென்றும் திரு. தெய்வேந்திரன்மேலும் கூறினுர்.

வரிவிஷயத்தில் எல்லா அங்கத்தவர்களும்ராஜினுமா செய்துவிட்டு மீண்டும் போட்டியிடட்டும் என திரு. தெய்வேந்திரன் சவால்விட்டார்.

வழக்கம்போல உள்ளவரிதான் வசூலிக்கப்படுவதாகவும் தண்ணீர் சேவையால் பயனடையும்பகுதிகளுக்கு 14 அரை வீதமும், தண்ணீர் சேவைபயனடையாத பகுதிகளுக்கு 12 அரை வீதமும் வரி வசூலிக்கப்படுவதாகவும் மேயர் தெரிவித்தார்.

## பிரேரணை வாபஸ்

குன்றக்குடி அடிகளாருக்கு நஞ்சு கொடுத்த செய்தி பற்றி பொலிசார் விசாரணை நடத்தி உண்மையை அறிவிக்கவேண்டும் என்று திரு. வி. சிவசுப்பிரமணியம் ஒரு பிரேரணையைக் கொண்டு வரமுன்னறிவித்தல் கொடுத்திருந்தார். சபையில் அப்பிரேரணையை அவர் வாபஸ் பெற்றுக்கொண்டார்.

குன்றக்குடி அடிகளாரும், நல்லூர் கூட்டத்திற்கு தலைமைவகித்த திரு. சபாலிங்கமும் பொலிசாரும் உண்மையை விளக்குமக்கள் மனதை திருப்திப்பண்ணியிருப்பதால் இப்பிரேரணையை வாபஸ் பெற்றுக் கொள்வதாகதிரு சிவசுப்பிரமணியம் கூறினுர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பாம்பு-நாய் நடத்திய போர்

மட்டுவில், செவ்வாய்

குட்டிகளுடன் இருந்த செட்டி நாக பாம்புடன் போரிட்ட குட்டி போட்ட நாயொன்று பாம்பினுல் தீண்டப்பட்டது. பின் பாம்பும் நாயும் இறந்து கிடக்கக் காணப்பட்டன.

மட்டுவிலில் திரு. மூத்ததம்பி வீட்டில் நடைபெற்ற இச்சம்பவத்தில் அவருடைய நாயே பாம்புக்கடிக்கு இலக்காகி மரணமாகியது.

3 பாம்புக்குட்டிகளைபொது மக்கள் அடித்துக்கொன்றனர்.

கடும்மழைகாரணமாகவே இப்பாம்புஇப்பகுதிக்குவந்ததகக்கூறப்படுகிறது.

## அனலைதீவுக்கு வைத்திய அதிகாரி

ஊரதீவு, திங்கள்

புதிதாக அமைக்கப்பட்டுள்ள அனலைதீவு ஆஸ்பத்திரிக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகளில் சுகாதார அமைச்சு ஈடுபட்டுள்ளது. இதற்கு முன்னேடியாக டாக்டர் தங்குவதற்கு விடுதி வசதி ஒன்றை ஏற்படுத்துமாறு சுகாதார அமைச்சு தீவுப் பகுதி எம் பி. திரு வி. நவரத்தினத்திடம் கேட்டுக் கொண்டுள்ளது,

வார்ட்டுடன் அமைக்கப்பட்டுள்ள அனலைதீவு ஆஸ்பத்திரியும் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி நிர்வாகக் கட்டிடமும் ஜனவரி முற்பகுதியில் சுகாதார அமைச்சர் திரு ஈ. எல். சேனநாயகாவினுல் திறந்து வைக்கப்படும்.

# மிளகாய்ச் செய்கைக்கு சில யோசனைகள்

வருகிற நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இலங்கையின் எல்லா வட்டாரங்களிலுமுள்ள பாடசாலைகளுக்கிடையே மிளகாய் செய்கைப் போட்டி ஒன்று நடத்துவதற்கு கல்விப் பகுதி முடிவு செய்திருப்பதால் மிளகாய் சாகுபடி பற்றிய சில குறிப்புகள் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவியாயிருக்கும்.

பாடசாலைகளில்தோட்டம் செய்வது இலங்கைக்கு புத்திதான காரியமல்ல. இப்பொழுதுள்ள கமத்தொழிற் பகுதி நிறுவப்பட முன்பு இருந்த இலங்கை கமச்சங்க காலத்திலேயே பாடசாலைகளில் மிகவும் முன்னேற்றமான முறையில் தோட்டங்கள் செய்யப்பட்டன. அப்பொழுதும் வேலியடைப்பதற்கு வேண்டிய முட்கம்பி முதலியனவும் பிற உபகரணங்களும் பாடசாலைகளுக்கு ஒழுங்காக வழங்கப்பட்டன. திறமான தோட்டங்களுக்கு வருடாந்தப் பரிசுகள் வழங்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட சிறந்த ஆசிரியருக்கு பேராதனை விவசாயப் பாடசாலையில் ஒரு வருடத் தேர்ச்சியும் அளிக்கப்பட்டது. இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பின் உபகரணங்கள் வரத்து முறையினுலும் பாடசாலைகள் பெருகியதால் இவ்வழக்கம் நின்றுவிட்ட போதிலும் இப்பொழுது சில வருடங்களாக மீண்டும் தொடங்கியிருக்கிறது.

பாடசாலை ஆசிரியர்கள் முக்கியமாக கிராமங்களில் சேவை செய்பவர்கள் இயல்பாகவே விவசாயத்தில் ஆர்வமுள்ளவர்கள். மாணவர்களும் அப்படியே. இவர்களில் பெரும்பாலார் கமக்காரக் குடும்பங்களில் பிறந்து வளர்ந்தவர்களாதலால் கமச்செய்கை அவர்களுடைய ரத்தத்தில் ஊறியிருக்கிறது தவளைக் குஞ்சுக்கு தண்ணீரைக் காட்ட வேண்டியதில்லை.

இதுவுமன்றி பாடசாலைக்குரிய காணிகளில் பல வெறும் தரிசு நிலங்களாகக் கிடக்கின்றன. விவசாயத்துக்குகந்த சுமார் 10,000 ஏக்கர் நிலம் இப்படியிருப்பதாக கமத்தொழிற் பகுதி மதிப்பிடுகிறது. இவற்றை பூரணமாக பயன்படுத்தினுல் உப உணவுப் பொருட்




களான மிளகாய், பம்பாய் வெங்காயம், உருளைக் கிழங்கு, மஞ்சள் முதலியவற்றிற்கு நாம் செலவிடும் அந்நிய செலாவணியில் பெரும் பாகத்தை மிச்சம் பிடிக்கலாம். ஆகையால் பாடசாலைத் தோட்டச் செய்கையில் அரசாங்கம் எவ்வளவு தூரத்துக்கு அக்கறை கொள்ளுகிறதோ அவ்வளவுக்கு நன்மையுண்டு. ஒவ்வொரு போகப் பயிருக்கும் அந்தந்த போகத்தில் போட்டிகளை நடத்தலாம்.

மிளகாய்ச் செடியானது மிகவும் குளிரான மலைநாட்டு பிரதேசங்களைத் தவிர இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் விளைவிக்கக்கூடியது. தற்சமயம் உணர்வலயத்திலுள்ள யாழ்ப்பாணம், வவனியா, முல்லைத்தீவு, மன்னுர், புத்தளம், அனுராதபுரம், பொலன்னறுவை. திருக்கோணமலை, அம்பாறை, மொனராகலை, அம்பாந்தோட்டை ஆகிய வட்டாரங்களில் மிளகாய் உற்பத்தி நடக்கிறது. ஆயினும் யாழ்ப்பாணத்திலும், வன்னிப்பகுதிகளிலுமே அது பெருமளவில் தோட்டப் பயிராக செய்யப்படுகிறது. மற்றைய இடங்களில் சேனைகளிலும் வீட்டுத் தோட்டங்களிலும் பயிரிடுகிருர்கள். சுமார் 2000 ஏக்கர் நிலத்தில் மிளகாய் நீர்ப்பாசனத்தோடும் சுமார் 23,000 ஏக்கரில் மானுவாரியாகவும் செய்கிருர்கள்.

சோழக மழை பெய்யுமிடங்களில் சித்திரை, வைகாசியிலும் வாடை மழை பெய்யுமிடங்களில் ஐப்பசி, கார்த்திகை மாதங்களிலும் மிளகாய்க் கன்றுகள் நாட்டப்படும். ஆயினும் போதிய நீர்ப்பாசன வசதி இருப்பின் மிளகாய் வருடம் முழுவதும் லாபம் தரக்கூடிய முறையில் சாகுபடி செய்யக்கூடியது. நீர்வடிந்தோடக்கூடிய ஆழமண் எதுவாயிருந்தாலும் மிளகாய் அதில் வளரக்கூடியது. இருவாட்டி மண் மிகச் சிறந்ததாயினும் பிறமண்களை நன்கு தூர்வையாக்கி, களை போக்கி நடலாம். மிளகாய்க்குச் சிறந்த உரம் மாட்டெருவே. தோட்டக் கணக்கில் பயிரிடுவோர் அவற்றில் பட்டி கட்டி விடுவார்கள். ஆனுல் இது பாடசாலைகளில் சாத்தியமாகாது

சிறந்த இன நெற்றுகளிலிருந்து விதைகளைத் தெரிவு செய்து நாற்றுமேடையில் விதைக்கவேண்டும் நாலைந்து இலை வைத்த கன்றுகளாயிருக்கும்போது அவற்றை வேரறுமல் பிடுங்கிப் பண்படுத்தித் தயார்செய்யப்பட்ட தோட்டத்தில் சுமார் இரண்டு அடி தூரத்துக்கு மும்மூன்று கன்றுகளாகச் சேர்த்து நடவேண்டும். தோட்டத்தில் போதியளவு சூரிய வெளிச்சம் விளக்கூடியதாயிருக்கவேண்டும். நட்டு இரண்டொரு நாட்களுக்கு மட்டும் கன்றுகளுக்கு ஆதாரமாக அருகில் குளை கொம்புகளை ஊன்றிவிடலாம்.

மழை இல்லாதுவிட்டால் காலையிலும், மாலையிலும் நீர்ப்பாய்ச்சவேண்டியது மிகவும் அவசியம். மழை உள்ள இடங்களில் மழை வீழ்ச்சிக்குத் தக்கவாறு பாசனத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ளலாம் கன்றுகளை நட்டு சுமார் 18, 20 நாட்கள் கழிந்தபின்பு இரண்டு நாட்கள் தண்ணீர் துப்புரவாகப் பாய்ச்சாமல் விட்டுவிட்டு மறுபடிப்பாய்ச்சினுல் செடிகள்உக்கிரமாகவளரும் என்று கமக்காரர்கள் அபிப்பிராயப்படுகிருர்கள்.

மற்றக் காய்கறிகளைப் போல மிளகாய்ச் செடியை நோய்கள் அதிகமாக தாக்குவதில்லையானுலும், திரிப்ஸ், சிற்றுண்ணிகள் ஆகிய இருவகைப் பூச்சிகளும் மிளகாய் இலைகளை வெப்பக்கேடு செய்துவிடுகின்றன. திரிப்ஸ் நோயினுல் இலைகள் சுருண்டு செழிப்பு கெட்டுவிடுகின்றன இவ்விரு பூச்சிகளையும் கட்டுப்படுத்தக்கூடிய கிருமிநாசினிகளை கடைகளில் கேட்டுவாங்கலாம்.

நல்ல சாகுபடி வேண்டுமானுல் தூர்வையான மண்ணும் நல்ல உரமும் நிறைய சூரிய வெளிச்சமும் களை போக்குதலும் முறையான நீர்ப்பாசனமும் நோய்த் தடுப்பும் மிளகாய்க்கு அவசியமானவை. ...கலப்பை

## கிராமசபையின் முன்மாதிரி

உடுப்பிட்டி, திங்கள்

உடுப்பிட்டிக் கிராமசபை 35,000 ரூபாவைச் செலவிட்டுச் சிறந்த முறையில் சில வீதிகளைத் திருத்தியும் புதிய வீதிகளை அமைத்தும் வருகிறது.

## பஸ்சேவை சீர்கேடு

பச்சிலைப்பள்ளி, செவ்.

கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக யாழ்ப்பாணம், தாளையடி, பருத்தித்துறை, ஆளியவளை பஸ் சேவைகள் சீர்கேடடைந்துள்ளன. சேவையிலீடுபட்டிருக்கும் பஸ்களில் மழைநீர் ஒழுகுவதால் பஸ்சுக்குள் குடைபிடித்தபடி பிரயாணம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org